DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel: 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது ஆண்டை நோக்கி

Towards 25th Year in Publishing

www.uthayannews.ca

UTHAYAN
உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

$1.00

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

உதயம் 1282 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday October 30, 2020

# Ontario Government will Keep Electricity Costs Low for Families, Small Businesses and Farmers

# ஒன்றாரியோ மாகாணத்தில் குடும்பங்கள் சிறிய வர்த்தகம் ஆகியோர்க்கான மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்படவுள்ளன



ஒன்றாரியோ மாகாணத்தில் வாழும் குடும்பங்கள், சிறிய வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பண்ணை முறையில் விவசாயத்தை மேற்கொண்டு வரும் தனி நபர்கள் அல்லது நிறுவனங்கள் ஆகியவற்றின் நலன் கருதி மின்சாரக் கட்டணங்களை குறைத்து அதை மா-றாமல் வைத்திருக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக ஒன்றாரியோ மாகாணத்தில் மின்சக்தி மற்றும் சுரங்கங்கள் ஆகிவற்றுக்கு பொறுப்பான அமைச்சின் இணை அமைச்சர் Bill Walker தெரிவித்தார்.

ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள பல் மொழி சார்ந்த ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகள் ஆகியவற்றின் பிரதம ஆசிரியர்களையும் செய்தியாளர்களையும் இணைத்த இணையவழி கலந்துரையாடலின் போது தெரிவித்தார்.

மேற்படி இணையவழிக் கலந்துரையாடலை தமிழ் பேசும் மாக-ாணப் பாராளுமன்ற உறுப்பினரும் ஒன்றாரியோ போக்குவரத்து அமைச்சின் பாராளுமன்றச் செயலாளருமான விஜேய் தணிகாசலம் இணைப்பாளராக செயற்பட்டார். கனடா உதயன் சார்பாக அதன் பிரதம ஆசிரியரும் அங்கு பங்குபற்றினார்.

முதலில் அமைச்சர் தனது அறிமுக உரையில், ஒன்றாரியோ மாகாணத்தில் வாழும் பொதுமக்கள் மற்றும் சிறு வர்த்தக நிறுவனங்கள், பண்ணை விவசாயத்தில் ஈடுபட்டுள்ள தனிநபர்கள் ஆகியோருக்கு ஒரு மகிழ்ச்சியான அறிவிப்பை விடுப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 1ம் திகதி தொடக்கம், உங்கள் அனைவருக்காகவும் புதிய மின்சாரக் கட்டணங்களின் விபரம் அனுப்பி வைக்கப்படவுள்ளது. அதில் மாற்றியமைக்கப்பட்ட கட்டணங்களின் அடிப்படையில் சுமார் 32.2 வீதம் கட்டணக் குறைப்பு அமுல் செய்யப்படுவுள்ளது. மூலம் மின்சார வாடிக்கையாளர்களுக்கு எந்த கட்டண வகைக்குள் அடங்கவேண்டும் என்ற விருப்பத்தின் அடிப்படையிலான கட்டணங்கள் அறவிடுவதற்கும் எமது அமைச்சு முடிவெடுத்துள்ளது.

வாடிக்கையாளர் மின்சாரத்தைப் பாவிக்கு நேரத்தை பொறுத்து கட்டணம் அறவிடப்படும் புதிய திட்டத்தின் பிரகாரம், கட்டணங்கள் மாறுவதற்கு இடமுண்டு. அதிகளவு மின்சாரம் பாவிக்கப்படும் இரவு நேரங்கள் மற்றும் மாலை நேரத்தில் பாவனை ஆகியவற்றும் வெவ்வேறான கட்டணங்கள் அறவிடப்படுவதனால் வாடிக்கையாளர் பல நன்மைகளைப் பெறவும் திட்டமிட்டு மின்சாரத்தை பயன்படுத்துவதால் அதன் மூலம் அதிகளவு பணத்தை சேமிக்கக் கூடியவகையில் புதிய கட்டண விபரங்கள் எமது அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ளன கோவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள இந்த காலப்பகுதியில், இவ்வாறான கட்டணக்குறைப்பை எமது அரசாங்கம் அமைச்சினால் நடைமுறைப்படுத்துகின்றது. ஒன்றாரியோ வாழ் மக்களுக்கு தங்கள் வசதிக்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்ப மின்பாவனையை செய்து அதன் மூலம் அதிக சேமிப்பைப் பெறவேண்டும் என்பதே எமது விருப்பம் ஆகும்" என்றார்

"அத்துடன் கோவிட்-19 தாக்கத்திற்கு முன்னரான காலப்பகுதியில் நிலுவையாக உள்ள தமது மின்சாரக் கட்டணங்களை செலுத்துவதற்கும் கால அவகாசம் வழங்கும் வகையிலும் எமது அமைச்சு மின்சாரத்தை வழங்கும் அரச ஸ்தாபனங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளோம்.

இந்த புதிய மின்கட்டண விபரங்களின் படி ஒரு வருடத்திற்கு சாதாரண குடும்பங்களின் மின்சாரக் கட்டணங்கள் வருடத்திற்கு 1000 டாலர்களை சேமிக்க முடியும் என்றும் நாம் எதிர்பார்க்கின்றோம்.



அத்துடன் நகரசபைகள் சார்ந்த மின்சாரம் வழங்கும் நிறுவனங்களின் கட்டணங்களில் சலு-கைகளை வழங்கவுள்ள அதே நேரத்தில் Hydro One மின்சார வழங்கும் அரச நிறுவனத்தின் வாடிக்கையாளர்களும் கணிசமான அளவு கட்டணக் குறைப்பை அனுபவிக்கும் வகையிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன

எமது அரசாங்கமானது ஒன்றாரியோ வாழ் மக்களின் நலன் கருதி பல நல்ல திட்டங்களை அறிமுகம் செய்கின்றது. நவம்பர் 1ம் தி-கதி நடைமுறைக்கு வரவுள்ள புதிய கட்டண விபரங்களின் படி அவர்கள் பலனை அனுபவிக்கலாம்." அத்துடன் மின்சார விநியோகம் கூட எவ்வித பாதிப்பும் இல்லாமல் பலமிக்கதாகவும் சீராகவிருக்க மின் உற்பத்தி நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்களையும் நாம் வழங்கியுள்ளோம்" என்றும் அமைச்சர் கூறினார்.

அங்கு கலந்து கொண்ட பல்மொழி பத்திரிகையாளர்கள் மற்றும் செய்தியாளர்கள் பயனுள்ள கேள்விகளைக் அமைச்சரிடம் கேட்டு தெளிவைப் பெற்றார்கள்.

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

ZY RENOVATION
உங்கள் இல்லங்கள் அல்லது பண்ணை வீடுகள் ஆகியவற்றில் அழகிய திருத்த வேலைகளைச் செய்து கொள்ள எம்மை அழையுங்கள்
Interior: Staircase Refinishing/ Installation-Flooring/Installation Bathroom/ Kitchen/ Basement Renovations Additions & Extensions
Exterior: Fence/ Interlock/ Deck
ZY- Renovation Call: Ethan@ 647 995 5955

# MORTGAGE SOLUTIONS

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

www.mortgageSolutions.ca

MONTHLY SAVING $2,478

SAVE UPTO 75% REFINANCE



KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com


## GHURUS TOWING

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

## COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN:
(416) 894-6244


உதயன் கதிரோட்டம்

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்தியா இன்னும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று குறிப்பிடுவது சரியானதா?

உடல் தளர்ந்த நிலையில் உள்ள இரா. சம்பந்தன் அவர்களை கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் நேற்று முன்தினம் தனது இல்லத்திற்கு அழைத்து சந்திப்பு ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளரின் கொழும்பு விஜயத்திற்குப் பின்னால் நவம்பர் 3ம் திகதி நடைபெறவுள்ள அமெரிக்கத் தேர்தல் ஒரு முக்கிய காரணியாக உள்ளது என்று அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுவது போல சம்பந்தர்-இந்தியத் தூதுவர் சந்திப்புக்கு பின்னால் விசேடமான காரணம் எதுவும் இருக்காது என்று நாம் கருதினாலும். இந்தியப் பிரதமர் மோடியை தான் சந்திக்க வேண்டும் என்று விரும்பிய சம்பந்தரை நேரடியாக தனது இல்லத்திற்கு அழைத்து தேநீர் விருந்தளித்து கௌரவப்படுத்த இந்தியத் தூதுவர் முன்வந்திருக்கலாம். அப்போது இந்தியத் தூதர் சம்பந்தரின் வேண்டுகோளான இந்தியப் பிரதமரைச் சந்திப்பது தொடர்பாக உடனடியாக பதிலளிக்காமல் இருந்திருக்கலாம்.

இந்தியப் பிரதமர் மோடியை எத்தனையோ தடவைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சிலர் இரா. சம்பந்தன் அவர்களது தலைமையில் சந்தித்துள்ளனர். எமது தமிழர் தொடர்பான பிரச்சனையில் இந்தியா கடந்த அரசாங்கத்தின் காலத்தில் எவ்வாறு நடந்து கொண்டது என்பதை தமிழ் மக்கள் அனைவரும் நன்கு அறிந்து வைத்துள்ளனர். அதேபோன்று, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமது மக்கள் நலன் காப்பதிலும் பார்க்க, எவ்வாறு ரணில் விக்கிரமசிங்காவையும் அவரது ஐக்கிய தேசியக் கட்சியையும் பாதுகாத்தது என்பதையும் தமிழ் மக்கள் நன்றாகவே தெரிந்துகொண்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, குறிப்பிட்டளவு எண்ணிக்கையைக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தங்களை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற நினைத்துக் கொள்வதும், முன்னரைப்போல தமிழ் மக்களின் நலன்களில் அக்கறை செலுத்துவது போன்று காட்டிக்கொள்வதும் அவர்களின் தேவைகள் சார்ந்தது என்பதை நாம் ஏற்றுக்கொண்டாலும் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தியத் தூதுவருடனான சந்திப்பின்போது தெரிவிக்கப்பட்ட பல விடயங்கள் அனைத்தும் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுமா என்பதை இந்திய தூதுவரோ அன்றி சம்பந்தர் அவர்களோ எண்ணிப்பார்க்கவும் விரும்பியிருக்கமாட்டார்கள் என்பதே உண்மை.

அன்றைய சந்திப்பின் போது பல விடயங்கள் பற்றி உரையாடிய பின்னர் "தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன், வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவும், முதலீடுகளைச் செய்யவும் இந்தியா தயாராக இருக்கின்றது" என தூதுவர் சம்பந்தர் அவர்களிடம் தெரிவித்ததாக எமக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்துள்ளதை வைத்து பார்க்கின்றபோது வடக்கு கிழக்கு மக்களின் பிரதிநிதிகள் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பை 'தூக்கி நிறுத்த' வேண்டிய தேவை இந்தியத் தூதுவருக்கு ஏன் வரவேண்டும் என்பதே பலரது கேள்வியாக தற்போது உள்ளது

மேலும், "ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கை விடயம் போன்ற பல விவகாரங்கள் குறித்து பேசியதாகவும் தமிழர் தரப்பு விடயங்கள் தொடர்பில் தன்னிடம் கேட்க வேண்டியவற்றை இந்தியத் தூதுவர் கேட்டறிந்தார" என்றும் சம்பந்தர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியபோது தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தளவிலும், தற்போது கூட தொடர்ச்சியாக வீதிகளில் நின்றவண்ணம் காணமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்காக கண்ணீர் வடித்தபடி குரல் எழுப்பி நிற்பவர்களுக்கு சாதகமாகவோ அன்று ஆறுதல் வழங்கவோ இதுவரை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்வரவில்லை என்பது குழந்தைகளுக்குக் கூடத் தெரிந்த விடயம்,பல தடவைகள் காணமால் ஆக்கப்பட்ட உறவுகளின் கோபாவேசங்களுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் ஓடி ஒளித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் சுமந்திரன் போன்ற உறுப்பினர்களும் இந்த தடவை ஜெனிவாவில் என்ன செய்வார்கள் என்பதை நன்கு அறிந்து கொண்டுள்ள இந்தியத் தூதரோடு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வு தொடர்பாகவும் பேசியதாக சம்பந்தர் ஐயா தமிழர்களுக்கு சொல்கின்றார். அதை மக்கள் நம்பவேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றார்.

வடக்கில் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இருந்தும், தொடர்ந்தும் இந்தியாவும் இந்தியத் தூதுவர்களும் விக்கினேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார் போன்றவர்களை முன்னிலைப்படுத்தாமல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சரிவை நிமிர்த்தும் முகமாக இவ்வாறான பல தந்திரமான சந்திப்புக்களை நடத்திக்கொண்டே இருப்பார்கள் என்றும், நாம் முன்னர் பல தடவைகள் இந்தப் பக்கத்தில் எழுதியதைப் போன்று புலம் பெயர் தமிழர்களும் ஈழத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்து வரும் அமைப்புகளும் இவ்வாறான நகர்வுகளைக் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம்.


## அறைகள் வாடகைக்கு உண்டு

Kennedy Station க்கு அருகில் Maida vale இல் அறைகள் வாடகைக்கு உள்ளன.
Brand new and newly done with a separate entrance.
Within walking distance to all necessary locations, such as grocery stores and subway stations.

Call: (647) 501-2720

## விசேட வாழைஇலைச் சாப்பாடு. ஓடர் செய்து பெற்றுச் செல்லுங்கள்

ஸ்காபுறோவில்
மோர்னிங்சைட் - செப்பர்ட்
சந்திப்புக்கு அருகில்
வாழை இலைச்சாப்பாடு மற்றும் Lumprice ஆகியவற்றை ஓடர் செய்து பெற்றுச் செல்லுங்கள்.
வெள்ளிக்கிழமைகளில்
வாழை இலையில் 6 மரக்கறிகளுடன் சாப்பாடு - $6.50.
சனிக்கிழமைகளில் மட்டன், சிக்கன் Lumprice - $14.00 மட்டுமே.

Call: (416) 832-6345

## வேலைக்கு ஆட்கள் தேவை

Scarborough வில் அமைந்துள்ள பூக்கடை ஒன்றிற்கு வேலை ஆட்கள் தேவை.

மலர் மாலைகளை தயாரிக்கும் திறன் கொண்ட நபர் தேவை.

Varadhan:
(416) 288-1419

## BASEMENT வாடகைக்கு உண்டு

Birchmount / Eglinton
சந்திப்பிற்கு அருகில்
2 bedroom basement with separate entrance
மற்றும் எல்லாவித வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
Close to TTC, subway, & shopping.
குடும்பம் விரும்பத்தக்கது.

Call: (416) 821-2181


# இலங்கையின் நாடாளுமன்ற அமர்வில் ஊடகவியலாளருக்கு தடை!

எதிர்வரும் 3ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் நாடாளுமன்ற அமர்வில், ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண்டே ரைம்ஸ்' ஆங்கிலப் பத்திரிகையின் நாடாளுமன்ற செய்தியாளருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எனினும் பத்திரிகையாளர்கள் காணொளி மூலம் அமைச்சர்களிடம் கேள்விகளைக் கேட்கும் சந்தர்ப்பம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுவதாக கொழும்பு ஊடகவியலாளர் ஒருவர் கனடா உதயனுக்கு அறியத் தந்துள்ளார்.

# இலங்கை விமானப் படைக்கு புதிய தளபதி நியமனம் செய்யப்பட்டுள்ளார்



இலங்கை விமானப் படையின் புதிய தளபதியாக எயார் வைஸ் மார்'ல் சுதர்'ன பதிரண நியமிக்கப்பட்டுள்ளார்.
இலங்கை விமானப் படையின் 18ஆவது தளபதியாக இவர் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
நவரம்பர் மாதம் 2ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதியினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம்– பருத்தித்துறை தனியார் பேருந்து சேவைகள் நிறுத்தம்!

பருத்தித்துறை யாழ்ப்பாணம் 750 இலக்க வழி சேவையில் ஈடுபடும் அனைத்து தனியார் பேருந்துகளும் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலில் இடை நிறுத்தப்பட்டுள்ளன.
கரவெட்டி ராஜ கிராமத்தைச் சேர்ந்த பலர் தனியார் பேருந்து சாரதிகள், நடத்துனர்களாகப் பணியாற்றும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கரவெட்டி ராஜ கிராமத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று முன்தினம் கண்டறியப்பட்டது. பேலியகொட மீன் சந்தைக்கு சென்று வந்த நிலையில் அவர் கிராமத்தில் நடமாடியுள்ளார்.

இந்த நிலையில் ராஜ கிராமத்தில் 60 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளன. தொற்றாளருடன் நேரடித் தொடர்பிலிருந்த யாராவது தனியார் பேருந்து சேவையில் கடமையாற்றினால் பயணிகளுக்கு தொற்று ஏற்படலாம். அதனால் தொற்றாளருடன் நேரடித் தொடர்புடையோரைக் கண்டறியும் வகையில் பருத்தித்துறை யாழ்ப்பாணம் 750 வழித்தட சேவையில் ஈடுபடும் அனைத்து தனியார் பேருந்துகளும் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலில் இடைநிறுத்தப்பட்டுள்ளன.



இலங்கை செய்திகள்



# சீனாவின் குறுநில அரசாக இலங்கை என எச்சரிக்கும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையே அதிகரித்து வரும் ஒத்துழைப்பு என்பது இலங்கையை சீனாவின் குறுநில அரசாகி (Vassal State) விடும் ஆபத்து உள்ளது என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் எச்சரித்துள்ளது.

ஐநா மனிதவுரிமைப் பேரவை உள்ளிட்ட பன்னாட்டு மன்றங்களில் சிறிலங்காவைப் பாதுகாப்பதாக சிறிலங்காவுக்கு சீனம் அண்மையில் வழங்கியுள்ள உறுதியினை மையப்படுத்தி அமெரிக்க வெளியுறவுச் செயலர் பொம்பியோவுக்கு எழுதிய கடிதத்தில் இவ்விடயத்தினை நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சகத்தின் 2020க்கான ஆண்டறிக்கையில் கூறியிருப்பது போல், சீன அரசுக்குச் சொந்தமான நிறுவனமொன்றிடம் குத்தகைக்கு விடப்பட்டுள்ள சிறிலங்காவின் ஹம்பாந்தோட்டா துறைமுகத்தின் நிலை என்பது, இந்தியப் பெருங்கடலுக்குள் அதிகார நீட்சிக்கு இத்துறைமுகதளத்தை சீனம் இராணுவ நோக்கில் பயன்படுத்த விரும்புவதாகத் தெரிகிறது என்பதனையும் பிரதமர் வி.உருத்திரகுமாரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனிதவுரிமை மீறல்களிலும், சுற்றுசூழலை வலிந்து அழிவுப்பதிலும், சீனத்தின் நடத்தை என்பது உலகறிந்த விடயம் என்பதும், சீனம் இத்துறைமுகத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படக் கூடிய விளைவுகள் பற்றிய அச்சம் அறிவார்ந்த ஒன்றெனவும் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

ஆகவே, இந்தச் சிக்கல்களைக் கவனிக்க உங்கள் பதவிப் பொறுப்பின் அதிகாரத்தையும் விருப்புரிமையையும் பயன்படுத்துவது குறித்துக் கருதிப் பார்க்கும் படி சிறிலங்காவுக்கு பயணம் செய்யவுள்ள அமெரிக்க வெளியுறவுச் செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், தமிழினப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல், ஹம்பாந்தோட்ட துறைமுகத்தைச் சீனம் பயன்படுத்திக் கொள்ளல் ஆகிய விடயங்களில் சிறிலங்காவை நேரடியாக கேள்விக்குட்படுத்துமாறு கோரியுள்ளது.

மேலும் அமெரிக்க வெளியுறவுச் செயலருக்கு எழுதிய கடித்தில், இலங்கைத்தீவின் இறுதிப்போரின் போது, 70,000க்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டதோடு, சிறிலங்கா அரசு புரிந்த போர்க் குற்றங்களுக்கும் மானிடத்துக்கு எதிரான குற்றங்களுக்கும் நம்பத்தக்க சான்றுகள் இருப்பதாக, ஐநாவின் முன்னாள் பொதுச் செயலர் பான் கி மூன் அமர்த்திய வல்லுநர் குழு அறிக்கையினை பிரதமர் வி.உருத்திரகுமாரன் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் 2015ம் ஆண்டு ஐ.நா மனிதவுரிமை உயராணையர் அலுவலகம் தந்த சிறிலங்கா பற்றிய புலனாய்வு (OISL) அறிக்கையில் முதன்மையாக சிறிலங்கா அரசு அமைப்புசார் குற்றங்கள் புரிந்ததாகக் கூறப்பட்டுள்ளதனையும் பிரதமர் வி.உருத்திரகுமாரன் சுட்டிகாட்டியுள்ளார்.

இதேவேளை அமைதிக்கும் நீதிக்கும் இப்பிராந்தியத்தின் பாதுகாப்புக்கும் ஆகச் சிறந்த தீர்வாக, ஸ்காட்லாந்திலும், எரித்ரியாவிலும், கொசாவோவிலும் நடத்தப்பட்டது போல் தமிழர்களுக்கான ஒரு பொதுவாக்கெடுப்பே என்பது நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் நம்பிக்கை என சுட்டிக்காட்டிய பிரதமர் வி.உருத்திரகுமாரன், இந்தியப் பெருங்கடலின் புவிசார் கேந்திரமாக இலங்கைத்தீவின் வடக்கு கிழக்குப் பகுதியின் 700 கிலோ மீற்றர் கடலோரப் பகுதியில் வாழும் தமிழ் மக்களின் சுதந்திரத்துக்கான வேணவா நியாயமானது, செல்லத்தக்கது என பிரதமர் வி.உருத்திரகுமாரன் சுட்டிக்காட்டியுள்ளமை அமெரிக்காவின் இந்தியப் பெருங்கடல் அரசியலின் முக்கியமான விடயமாக உள்ளமை இங்கு குறிப்பிடதக்கது.

# கரடியனாறு பிரதேச காணிகளை அளவீடும் பணிகள் இடைநிறுத்தம்!



மட்டக்களப்பு கரடியனாறு கரடியன்குளம் பிரதேத்தில் மக்கள் குடியிருப்புக்கள், விவசாய காணிகளை உள்ளடக்கிய காணிகளை கரடியனாறு விவசாயப் பண்ணைக்குச் சொந்தமானது என அளவீடுகளை மேற்கொள்ளும் பணிகள் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தலையீட்டினால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கரடியனாறு கரடியன்குளம் பிரதேசத்தில் சுமார் 60க்கும் மேற்பட்ட குடும்பங்கள் காலாகாலமாக அப்பிரதேசத்தில் விவசாயம் மற்றும் குடியிருப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அக் காணிகளுக்கான உறுதிப்பத்திரம், சுவர்ணபூமி திட்டத்தினால் வழங்கப்பட்ட பத்திரங்கள் என்பன இருக்கத்தக்கதாக, கரடியனாறு விவசாயப் பண்ணையின் அதிகாரிகளால் அக்காணிகள் விவசாயப் பண்ணைக்குரியது என்ற வகையில் அளவீடுகளை மேற்கொள்ள முயற்சித்தனர்.

இவ்விடயம் தொடர்பில் அப்பிரதேச மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் அவர்களுடன் தொடர்பு கொண்டு தெரிவித்தமைக்கமைவாக நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் கிழக்கு மாகாணசபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் ஆகியோர் அவ்விடத்திற்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு பிரதேச மக்களுடன் ஆலோசித்து, உரிய அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலாளருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டதையடுத்து அளவீட்டு நடவடிக்கைகள் உடன் இடைநிறுத்தப்பட்டன.

இது தொடர்பில் ஓரிரு நாட்களில் அப்பிரதேச மக்களுடன் பிரதேச செயலாளர் உட்பட விவசாயப் பண்ணை அதிகாரிகள் சகிதம் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கரவெட்டி "ராஜ கிராமம்" முடக்கப்பட்டது – 60 குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தலில்

வடமராட்சி, கரவெட்டி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ராஜ கிராமம் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் முடக்கப்பட்டிருப்பதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

அதன்மூலம் ராஜ கிராமத்திலிருந்து வெளியேறவோ அல்லது ராஜ கிராமத்துக்குள் உள்நுழையவோ எவருக்கும் அனுமதியளிக்கப்படாது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இன்று மாலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தொற்று பரவலை தடுப்பதற்காக ராஜ கிராமத்தில் தனிமைப்படுத்தல் முடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது.

சுமார் 60 குடும்பங்களை சேர்ந்த மக்கள் அங்கு தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர். அங்கு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவர்களுக்கு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது

இதேபோல் பாசையூர் மேற்கு மற்றும் குருநகர் பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கும் பிசிஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன" என்றும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

# யாழ் – அச்சுவேலி பகுதியில் மின்னல் வேகத்தில் சென்ற கார் மின் கம்பத்தில் மோதியதில் ஒருவர் பலி



யாழ்ப்பாணம் - அச்சுவேலி பகுதியில் இருந்து இராச வீதி ஊடாக இன்று (27) மாலை பயணித்துக கொண்டிருந்த காரென்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்துடன் மோதியதில் காரின் சாரதி சம்பவ இடத்தில் பலியாகியுள்ளார்.



இராச வீதி ஊடாக வேகமாக பயணித்துக் கொண்டிருந்த குறித்த கார் கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்துடன் மோதியதில் வாகனத்தின் சாரதி தனபாலசிங்கம் லஷ்சதீபன் (வயது-34) சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

அவருடன் பயணம் செய்த சிவன் சரல தீபன் (வயது-23) பலத்த காயங்களுக்கு உள்ளாகி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். உயிரிழந்தவரின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.


# ஊர்காவற்றுறை கடலில் மாற்றுத்திறனாளியான ஒரு ஆணின் சடலம் மீட்கப்பட்டது

ஊர்காவற்துறை கடற்பரப்பில் மாற்றுத்திறனாளியான ஆண் ஒருவரின் சடலம் நேற்று மதியம் மீட்கப்பட்டுள்ளதாக, பொலிசார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர், இரண்டாம் பண்ணை வீதியைச் சேர்ந்த பிரான்சிஸ் அன்ரனி (58) என பொலிசார் தெரிவித்தனர்.

தனித்து வாழ்ந்து வந்த இவர் இரவில் படகின் முகப்பில் உறங்குவதாக, பொலிசார் தெரிவித்தனர். அவ்வாறு உறக்கத்திலிருந்தபோது அவர் தவறி விழுந்திருக்கலாம் என, பொலிசார் தெரிவித்தனர். இது தொடர்பில் ஊர்காவற்துறை பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தில் பொம்பியோ அஞ்சலி!



அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக்கல் பொம்பியோ, இன்று புதன்கிழமை கொச்சிகடை புனித அந்தோனியார் ஆலயத்துக்குச் சென்று, உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்ந்து மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அப்போது இலங்கை இராணுவம் மற்றும் அமெரிக்காவின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோர் பலத்த பாதுகாப்பு வழங்கினர்.

# வேட்டையாடும் நாடு சீனா என்ற பொம்பியோவுக்கு பதிலடி கொடுத்த சீன தூதரகம்!

இலங்கையுடன் இராஜதந்திர அணுகுமுறையில் அமெரிக்கா ஒரே நேரத்தில் இரண்டு எதிரெதிர் பாத்திரங்களை வகிப்பதாக கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் குற்றம் சாட்டியுள்ளது. இன்று கொழும்பில் உள்ள வெளியுறவு அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ, சீனா ஒரு வேட்டையாடும் நாடு என்றும், நிலத்திலும் கடலிலும் இறையாண்மையை மீறுவதாகவும் கூறியிருந்தார்.

இவரது கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் சீனத் தூதரகம் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் எதிர் கருத்துக்களை முன்வைத்துள்ளது. குறித்த பதிவில் இலங்கை நட்பையும் ஒத்துழைப்பையும் ஊக்குவிப்பதில் நாம் மும்முரமாக இருக்கிறோம். ஆனால் அமெரிக்காவால் எப்போதுமே ஒரே நேரத்தில் இரண்டு வேடங்களில் நடிக்க முடியும் என்று பதிவிட்டுள்ளது.

# வவுனியாவில் வெளிமாவட்ட வியாபாரிகளிற்கு அனுமதி வழங்க வேண்டாம் என்கிறார் பிரதேச சபை தவிசாளர்

கொரோனா வைரஸ் தாக்கம் பரவலடைந்துவரும் நிலையில் வெளிமாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் வவுனியாவில் வியாபாரசெயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அரசு தடைவிதிக்கவேண்டும் என்று வவுனியா தெற்கு தமிழ்பிரதேசசபை தவிசாளர் து.நடராஜசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். குறித்த விடயம் தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அவர்.

கொரோனா வைரஸ் தாக்கம் நாடளாவிய ரீதியில் அதிகரித்து செல்கின்றது. வவுனியா மாவட்டத்திலும் வீதி திருத்தப்பணிகளில் ஈடுபட்டுவரும் சில நபர்களிற்கு வைரஸ்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றை கருத்தில்கொண்டு வெளிமாவட்டங்களில் இருந்து வருகைதந்து இங்கு வியாபாரச்செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அரசு தடைவிதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

வவுனியாவை பொறுத்தவரை வெளிமாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் இங்கு வருகைதந்து வீதிக்கரைகளிலும் பொது இடங்களிலும் பல்வேறு வியாபார செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.எமது பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலும் இந்த நடவடிக்கையில் பலர் ஈடுபட்டுவருகின்றனர்.

இதனால் வைரஸ்தாக்கம் இலகுவில் பரவலடைவதற்கான சந்தர்பம் ஏற்படுகின்றது. எனவே இவற்றை கருத்தில் கொண்டு வைரஸ்பரவலை கட்டுப்படுத்தும் நோக்குடன் முன் எச்சரிக்கையான முறையில் வெளிமாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் இங்கு வியாபாரம் மேற்கொள்வதற்கு அரசாங்கம் உடனடியாக தடைவிதிக்கவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசியல் கட்சி தொடங்கும் முடிவையே கைவிடுகிறார் நடிகர் ரஜினிகாந்த்?



அரசியல் கட்சியை தொடங்கும் முடிவையே நடிகர் ரஜினிகாந்த் கைவிட இருப்பதாகவும் இது தொடர்பான அறிக்கையும் தயாராகிவிட்டது எந்த நேரத்திலும் வெளியாகக் கூடும் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. நடிகர் ரஜினிகாந்த் அரசியல் கட்சியை தொடங்கி சட்டசபை தேர்தலில் போட்டியிடுவேன் என அறிவித்தார். ஆனால் ரஜினிகாந்த் பகிரங்கமாக அறிவித்தும் ஆண்டுகள் ஓடியதுதான் மிச்சம். அரசியல் கட்சியை ரஜினிகாந்த் தொடங்குவதற்கான எந்த சமிக்ஞையுமே இல்லை. ரஜினிகாந்தைப் பொறுத்தவரை 30 ஆண்டுகாலத்துக்கும் மேலாக அரசியலுக்கு வருவார் என்கிற பிம்பத்தை சுமந்து வருகிறார். இதனை சில ஆண்டுகளுக்கு அவரே வெளிப்படையாக அறிவித்தார். ஆனாலும் இந்த அறிவிப்பு கூட கடுமையான நெருக்கடிகளால்தான் வெளியிடப்பட்டது என்பது அரசியல் அறிந்த அனைவருக்கும் தெரிந்த கதை. அவ்வப்போது ரஜினிகாந்த் அபூர்வமாக தெரிவித்த கருத்துகள் அனைத்துமே சர்ச்சையாகிப் போனது. ஒருகட்டத்தில் ரஜினிகாந்த் அப்படியே கட்சி தொடங்கி தேர்தலை சந்தித்தாலும் தான் முதல்வராகப் போவதில்லை எனவும் அறிவித்தார். அந்த அறிவிப்பிலேயே ரஜினிகாந்த் பின்வாங்கிவிட்டார் என்றே சொல்லப்பட்டது. இதனைத் தொடர்ந்து சட்டசபை தேர்தல் நெருங்கிவரும் நிலையில் ரஜினிகாந்த் எந்த சூழ்நிலையிலும் வந்துவிடவே கூடாது என்பதில் திமுக படுதீவிரமாக காய்களை நகர்த்தியது. ஆனால் டெல்லியோ எப்படியாவது ரஜினியை களத்தில் இறக்கிவிட்டு வேடிக்கை பார்ப்பது என முடிவோடு இருக்கிறது.

இந்த நிலையில் கொரோனா பாதிப்பு ஓய்ந்தபாடில்லை ஆகையால் கொரோனா பாதிப்பை முன்வைத்து ரஜினிகாந்த் கட்சியை தொடங்கும் முடிவை கைவிடுவார் என கூறப்படுகிறது. இது தொடர்பாக அறிக்கை ஒன்றை ரஜினிகாந்த் தரப்பு தயாரித்து வைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. எந்த நேரத்திலும் ரஜினிகாந்தின் அரசியலுக்கு குட்பை அறிக்கை வெளியாகக் கூடும் என்றே கூறப்படுகிறது.



# என் வளர்ச்சிக்காக அப்பாவின் புகழை கெடுக்க மாட்டேன் என்கிறார் நடிகர் சத்யராஜின் மகள் திவ்யா

திவ்யா தமிழக மக்களிடம் நன்கு அறிமுகமான ஊட்டச்சத்து நிபுணர். மருத்துவ துறையில் நடக்கும் முறைகேடுகள் குறித்தும் நீட் தேர்வை எதிர்த்து பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியிருந்தார். அது அப்போது வைரலானது. அண்மையில் கொரோனா ஊரடங்கு காரணமாகப் பெரும் இழப்புகளைச் சந்தித்த விவசாயிகளுக்கு நேரடி நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று சமீபத்தில் விவசாய துறைக்கு கோரிக்கை வைத்திருந்தார் திவ்யா. இதன்பின்னர் "மகிழ்மதி" என்ற இயக்கத்தை தொடங்கினார். இந்த "மகிழ்மதி இயக்கம்" அரசியல் கட்சியோ,, சாதி, மதம் சார்ந்த அமைப்போ கிடையாது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கும் பகுதிகளில் ஊட்டச்சத்து நிறைந்த உணவை இலவசமாக வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட ஓர் இயக்கம் என்பதை தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து பாஜக சார்பில் திட்டமிடப்பட்ட ரத யாத்திரையை தமிழகத்தில் அனுமதிக்க கூடாது என தெரிவித்தார். அது சர்ச்சையாக மாறியது. இருந்தபோதிலும் இரும்பு பெண்மணியாக இருந்து ரத யாத்திரை தடை கோரிக்கைக்காக மன்னிப்பு கேட்க முடியாது என திட்டவட்டமாக தெரிவித்தார் திவ்யா. இந்த நிலையில் திவ்யா அரசியலுக்கு வரப்போவதாக அறிவித்தவுடன் வருகிற தேர்தலில் தன் மகளுக்கு ஆதரவாக சத்யராஜ் பிரச்சாரம் செய்வார் என்ற தகவல் பரவியது.இது தொடர்பாக திவ்யா கூறியதாவது: "அப்பா என் உயிர் தோழன். என் அரசியல் பாதையில் என்னுடன் கைகோர்த்து நிற்பார். ஆனால் முக்கியமான வி'யம். சொந்த வளர்ச்சிக்காக ஒரு போதும் அப்பாவின் புகழை உபயோகிக்க மாட்டேன்" என தெரிவித்தார் திவ்யா.

# ஆரோக்கியத்துக்காக உணவுக்கட்டுப்பாடு: நெல்லையப்பர் கோவில் யானை 300 கிலோ எடை குறைந்தது



நெல்லை என்று அழைக்கப்படும் திருநெல்வேலி மாநகரின் அடையாளமாக விளங்குவது, நெல்லையப்பர் கோவில். ஆண்டுதோறும் ஆனி மாதம் நடைபெறும் தேரோட்டம் இந்நகரின் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. கொரோனா பரவலால் இந்த ஆண்டு மட்டும் தேரோட்டம் ரத்து செய்யப்பட்டு விட்டது. பல நூறு ஆண்டு பழமை வாய்ந்த இந்தக்கோவிலில் நெல்லையப்பரையும், காந்திமதி அம்மனையும் தரிசிக்க தினமும் உள்ளூர் பக்தர்கள் பெருமளவில் வந்து செல்கிறார்கள்.

இந்தக் கோவிலில் வளர்க்கப்படும் யானைக்கு "காந்திமதி" என்று அம்மன் பெயரே சூட்டப்பட்டுள்ளது. 51 வயதாகும் இந்த யானையை அவ்வப்போது கால்நடை மருத்துவர்கள் பரிசோதித்து வருகிறார்கள்.

கடந்த ஆண்டு யானையை பரிசோதித்தபோது அதன் எடை 4,450 கிலோ இருந்தது.

"இது மிகவும் அதிகம். யானையின் வயதுக்கு 3,750 கிலோ எடை இருப்பதே நல்லது" என்று கருத்து தெரிவித்த மருத்துவர்கள், தினமும் யானைக்கு வழங்க வேண்டிய உணவு வகைகளை பரிந்துரைத்தனர். அதோடு, தினமும் யானை 'வாக்கிங்' செல்லவேண்டியதும் அவசியம் என்று ஆலோசனை வழங்கினர்.

இதைத்தொடர்ந்து, யானைக்கான "டயட் கன்ட்ரோல்" கடைபிடிக்கப்பட்டது.

பக்தர்கள் யாரும் தேங்காய், பழம், வெல்லம் வழங்கக்கூடாது என தடை விதிக்கப்பட்டது.

தினமும் 75 முதல் 150 கிலோ வரை கோரைப்புல் மட்டுமே யானைக்கு உணவாக வழங்கப்பட்டது.

அத்துடன், தினமும் கோவிலின் வெளிப்பிரகாரத்தை 20 முறை சுற்றி வரும் வகையில் யானைக்கு நடைப்பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், நீர்நிலையில் இருந்து தீர்த்தம் எடுத்து வரவும் யானையை பயன்படுத்தி அதன் நடை அளவை அதிகரித்தனர். கடந்த 9 மாதமாக மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சிகள் நல்ல பலனை அளித்துள்ளன. சிலநாட்களுக்கு முன், கால்நடை உதவி மருத்துவர் செல்லமாரியப்பன் வந்து யானையை பரிசோதித்தார். அப்போது அதன் எடை 300 கிலோ குறைந்து இருப்பது தெரிய வந்தது. எடை குறைந்ததால் முன்பை விட இப்போது யானை சுறுசுறுப்பாக இயங்குவதும் கண்கூடாகத்தெரிந்தது. "இந்த டயட் கன்ட்ரோலும், நடைப்பயிற்சியும் தொடரும்" என்றும், "இதன்மூலம் யானையின் ஆரோக்கியம் இன்னும் மேம்படும்" என்றும் கால்நடை மருத்துவர் தெரிவித்தார்.

*திருநெல்வேலியில் இருந்து- மணிராஜ்.*



# ஆனையிறவு கோர விபத்தில் தாயும் மகனும் பலி!

னையிறவுப் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் தாயும் மகனும் உயிரிழந்துள்ளனர். ஏ–9 வீதியில் பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எரிபொருள் தாங்கி வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் யாழ்ப்பாணம், நீராவியடிப் பகுதியை சேர்ந்த 58 வயதான இராதாகிருஷ்ணன் மீனாம்பாள் மற்றும் அவரது மகனான 28 வயதுடைய இராதாகிரு‘ணன் கிருபானந்தன் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

விபத்துக்குள்ளான ஓட்டோவில் பயணித்த தாயும் மகனும் படுகாயமுற்ற நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்ட போதிலும் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் தாங்கியைச் செலுத்தி வந்த சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# சம்பந்தனுடன் இந்திய தூதுவர் திடீர் சந்திப்பு!



இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை நேற்றிரவு சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது

தற்போதைய அரசியல் நிலவரங்கள், இலங்கை இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, ஜெனீவாவில் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு விவகாரங்கள் உட்பட பல தரப்பட்ட விடயங்கள் குறித்தும் இருவரும் பேசினர்.

இந்தச் சந்திப்புக் குறித்து இரா.சம்பந்தன் தெரிவிக்கையில், "முக்கிய விடயங்கள் குறித்துப் பேசினோம். தமிழர் தரப்பில் கூற வேண்டிய விடயங்களை நான் தெளிவுபடுத்தினேன். அரசியல் தீர்வு முயற்சிகள், புதிய அரசமைப்பு உருவாக்கம், அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை அடுத்து ஏற்பட்டுள்ள விடயங்கள், இரு நாட்டு உறவுகள், இந்தியப் பிரதமருடன் தமிழ்க் கூட்டமைப்பு பேச்சு நடத்துவதற்கான ஏற்பாடுகள், ஜெனீவாவில் ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை விடயம் போன்ற பல விவகாரங்கள் குறித்து பேசினோம். தொடர்ந்தும் பேசுவோம்" எனக் குறிப்பிட்டார்.

# வெலிஓயா மருத்துவரை அச்சுறுத்திய பிரிகேடியர்! – மருத்துவ அதிகாரிகள் சங்கம் போர்க்கொடி

வெலிஓயா சம்பத்நுவர மாவட்ட வைத்தியசாலையின் தலைமை அதிகாரியை இராணுவ அதிகாரியொருவர் அச்சுறுத்தியுள்ளார் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்ட இராணுவஅதிகாரி தகாத வார்த்தைகளை பிரயோகித்து மருத்துவமனையின் தலைமை அதிகாரியை நிந்தனை செய்தார் என குறிப்பிட்டுள்ளது

பிரிகேடியர் கேகேஎஸ் பரகும் என்ற அதிகாரிக்கு எதிராகவே அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் இந்த குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளது.

இதன் காரணமாக மருத்துவமனையின் பணியாளர்களின் பாதுகாப்பை கருத்தில்கொண்டு தொழில்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்துள்ள வைத்திய அதிகாரிகள் சங்கம் வைத்தியசாலையின் பணிகளில் இருந்து விலகியுள்ளதாக அறிவித்துள்ளது.

யுத்தகாலத்தின் போது பயங்கரவாதத்திற்கு எதிராக போராடிய படையினர் பொலிஸாரிற்கு உளவியல்ரீதியான மருத்துவ ஆதரவை வழங்குவதற்காக மருத்துவர்கள் படைத்தரப்பினரை கௌரவத்துடன் நடத்தினார்கள் என அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும் குறிப்பிட்ட அதிகாரி தனது நடத்தைகள் மூலம் படைத்தரப்பிலிருந்து எதிர்பர்க்கப்படும் நடத்தையின் தராதரத்தை எட்டதவறிவிட்டார் என மருத்துவர்கள் மக்களின் கௌரவத்தை உறுதி செய்ய தவறிவிட்டார் என அரச மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# துமிந்தவை விடுவிக்க கோரும் மனுவில் இருந்து விலகினார் மனோ கணேசன் எம்.பி



மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை விடுதலை செய்யுமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கை கடிதத்திலிருந்து தமது கையெழுத்தை விலக்கிக் கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நால்வரை சுட்டுக்கொலை செய்த குற்றத்திற்காக துமிந்த சில்வா உள்ளிட்ட குற்றவாளிகளுக்கு 2016 செப்டம்பர் 8 ஆம் திகதி மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் அரச தரப்பு உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க தீர்மானித்திருந்த குறித்த மனுவில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் அந்த கட்சியை சேர்ந்த ஐந்து உறுப்பினர்களும் கையொப்பமிட்டிருந்தனர். இதற்கு கடும் எதிர்ப்பு எழுந்த நிலையிலேயே மனோ கணேசன் விலகுவதாக அறிவித்துள்ளார்.

# கிளிநொச்சியில் மது அருந்திய இளைஞன் இரத்த வாந்தி எடுத்து மரணம்!

கிளிநொச்சியில் மதுபானம் அருந்திய இளைஞன் ஒருவர் இரத்தவாந்தி எடுத்து உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி , பூநகரி 4ஆம் கட்டையை சேர்ந்த ஜேசுராஜா திலகராஜா (வயது 30) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை மதுபானம் அருந்திய நிலையில் இரத்த வாந்தி எடுத்துள்ளார். அதனை அடுத்து சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.




# கனடாவில் தொலைக்காட்சி ஊடகவியலாளர் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கபட்டார்



கனடாவில் இன்று நடைபெற்ற பாராளுமன்ற இடைத்தேர்தல் ஒன்றில் தொலைக்காட்சி ஊடகவியலாளரான Marci Ien என்பவர் ரொரன்ரோ மத்திய தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கபட்டார்.

எற்கெனவே இந்த தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த மத்திய லிபரல் அரசின் நிதி அமைச்சர் தனது பதவியை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து இந்த ரொரன்ரோ மத்திய தொகுதிக்கான இடைத்தேர்தல் நடைபெற்றது.

இன்றைய இடைத்தேர்தலில் தொலைக்காட்சி ஊடகவியலாளரான Marci Ien அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 41 வீதமான 7636 வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இரண்டாவது இடத்தை அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 33 வீதமான 6142 வாக்குகளைப் பெற்று கனடாவின் பசுமைக் கட்சியின் தலைவரான அனாமி போல் பெற்றார். இவர் பெற்ற வாக்குகள் பசுமைக் கட்சிக்கு நல்ல எதிர்காலம் உள்ளதைக் காட்டுகின்றது என ரொரன்ரொ மத்திய தொகுதியின் வாக்காளர் ஒருவர் எமக்கு தெரிவித்துள்ளார். இந்தத் தொகுதியில் ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதும், பசுமைக் கட்சியின் தலைவரான அனாமி போல் அவர்கள் எமது உதயன் பத்திரிகை மற்றும் நண்பன் இணையத்தளம் ஆகியவற்றுக்கு அளித்த பேட்டி கடந்த வாரம் பிரசுரமாகியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கனடாவுக்கான தூதுவராக விமானப்படைத் தளபதி கனடிய அரசு இந்த நியமனத்தை ஏற்றுக்கொள்ளுமா?



விரைவில் ஓய்வுபெறவுள்ள விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் சுமங்கல டயஸ், கனடாவுக்கான தூதுவராக நியமிக்கப்படவுள்ளார். இவருடன் மேலும் எட்டு நாடுகளுக்கான தூதுவர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

நைஜீரியாவுக்கான தூதுவராக சாதிக், சவூதி அரேபியாவுக்கான தூதுவராக அகமட் ஏ ஜவாட், நெதர்லாந்துக்கான தூதுவராக அருணி ரணராஜா, சுவீடனுக்கான தூதுவராக தர்ஷண பெரேரா, எகிப்துக்கான தூதுவராக, பத்மநாதன், போலந்துக்கான தூதுவராக சமரசிங்க, தாய்லாந்துக்கான தூதுவராக சமிந்த கொலன்னே, கட்டாருக்கான தூதுவராக மபாஸ் மொஹிதீன் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

உயர் பதவிகளுக்கான நியமனங்கள் குறித்த நாடாளுமன்றக் குழுவுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள இந்தப் பெயர்கள், அங்கீகரிக்கப்பட்ட பின்னர், நியமனங்கள் உறுதி செய்யப்படும்

# ஹாலிவுட் படங்களை இயக்கும் ஆஸ்திரேலியா வாழ் தமிழர் இளந்திரையன் ஆறுமுகம்



ஆஸ்திரேலியாவில் வசிக்கும் தமிழரான ஆலன் இளந்திரையன் ஆறுமுகம் என்கிற ஹாலிவுட் பட இயக்குனரின் முதல் படமே, பல்வேறு விருதுகளையும், பாராட்டுக்களையும் பெற்றுத் தந்துள்ளது. உலகத்தரமான படங்களை இயக்க வேண்டும் என்பதில் மிக கவனமாக செயல்படும், ஆலன் இளந்திரையன் முதன் முதலில் இயக்கிய "அய்யய்" என்கிற திகில் படம் உலகம் முழுவதும் வெளியாகி ரசிகர்களின் பேராதரவை பெற்றது.

Crown Wood International Film Festival, Delhi International Film Festival, Independent Star Film Fest ஆகியவை சிறந்த திரைப்படத்திற்கான விருதையும், International Screen Award, International Future Film Award, New York Cinematography Award, Oregon International Film Award - US. என ஏராளமான விருதுகளையும், பாராட்டுக்களையும் பெற்றது. இந்தியாவின் தேசிய விருதைப் போன்ற பெருமைக்குரிய, ஆஸ்திரேலியாவின் அகாடமி அவார்ட்டுக்கும் (Australian Academy Awards) இந்தப்படம் தேர்வாகி உள்ளது. இண்டிபெண்டண்ட் படமான அய்யய் படத்தை அடுத்து, ARK13 என்கிற பிரமாண்டமான படத்தை ஸ்டுடியோவோடு இணைந்து ஆலன் இளந்திரையன் இயக்க இருக்கிறார். இது ஒரு ஆக்ஷன் த்ரில்லர் கேங்ஸ்டார் மூவி.

ஹாலிவுட்டின் பாப்புலர் ரைட்டர் ஜான்கோலி உள்ளிட்ட, உலகத்தரமான ப்ளாக்பஸ்டர் படங்களில் பணியாற்றிய சிறந்த தொழில்நுட்ப கலைஞர்கள், நடிகர்கள் பலர், இப்படத்தில் இணைந்துள்ளனர். இதற்கான திரைக்கதை முழுவதும் வடிவமைக்கப்பட்டு, விரைவில் படப்பிடிப்பு தொடங்க உள்ளது.

இதனையடுத்து 14ம் நூற்றாண்டில் நடந்த உண்மைச் சம்பவத்தை மையமாக வைத்து The Nine Knight's என்கிற படத்தையும் இயக்குகிறார். தமிழர் ஒருவர் உலகளாவிய திரைப்படங்களை உருவாக்கி வருகிறார் என்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்று.



# மட்டக்களப்பில் ஆலய வழிபாடுகள் நிறுத்தப்பட்டு ஒரு வாரத்துக்கு தனிமைப்படுத்தல் சட்டம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று முதல் ஒருவாரத்திற்கு அனைத்து மதத்தலங்களில் மக்கள் ஒன்றுகூடும் வழிபாடுகள் இடைநிறுத்தப்படுவதுடன், சிகை அலங்கார நிலையங்களை மூடுவதற்கும், முடிவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் க. கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பிரதேசத்தில் மேலும் 16 பேருக்கு கொரோனா தொற்று உறுதி கண்டுபிடிக்கப்பட்டதுடன் இரண்டாங்கட்ட தொடர்பாளர்கள் 500 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இதனையடுத்து மாவட்ட கொரோனா தடுப்பு செயலணிக் கூட்டம் புதன்கிழமையன்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதற்கமைய உடன் அமுலுக்கு வரும்வகையில் தொற்று பரவாமலிருக்க இறுக்கமான தீர்மானங்கள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது தொற்று அபாயம் நிலவும் பிரதேசங்களில் அரச திணைக்களங்களில் 15 தொடக்கம் 20 வரையான உத்தியோகத்தர்கள் மாத்திரம் அனுமதிக்கப்படவுள்ளதுடன் ஏனைய பகுதிகளில் சுகாதார நடைமுறைகளைப் பேணி செயற்பட அனுமதிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் எதிர்வரும் ஒரு வாரத்திற்கு சகல மதத்தலங்களில் மக்கள் ஒன்றுகூடும் வழிபாடுகளை இடைநிறுத்தப்படும். மிக அவசியமாக நடத்தப்படவிருப்பின் மதகுரு உட்பட ஐவர் மாத்திரம் அனுமதிக்கப்படுவர். சிகை அலங்கார நிலையங்கள் மூடப்படவேண்டும்.

ஏற்கனவே தீர்மனிக்கப்பட்ட திருமண நிகழ்வுகளுக்கு அப்பகுதி சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைகமைவாக செயற்பட வேண்டும். மரணங்கள் ஏற்படின் 15 பேர் மாத்திரம் நல்லடக்க நிகழ்வில் கலந்து கொள்ளமுடியும். நகர்ப்புறங்களான மட்டக்களப்பு, காத்தான்குடி, ஏறாவூர், களுவாஞ்சிக்குடி போன்ற பிரதேசங்களில் சனநடமாட்டத்தினைக் கட்டுப்படுத்தப்படும். வர்த்தக நிலையங்களில் அனைத்து விதமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். சந்தைகளை திறந்த மைதானங்களில் நடத்த வேண்டும்.

உணவகங்களில் அமர்ந்து உண்பதற்கு 50 வீதம் அனுமதிக்கப்படுவர். பொதுப் போக்குவரத்தில் ஆசனங்களுக்கு அளவான பயணிகளையே ஏற்றப்படல் வேண்டும். இவற்றுக்கு மேலதிகமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் மக்கள் நடமாட்டத்தினைக் கட்டுப்படுத்த பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் நடமாடும் காவல் பிரிவு செயற்படுவதுடன் பொதுமக்கள் இருவருடன் அரச உத்தியோகத்தர்கள் மூவரும் இணைப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தனிமைப்படுத்தல் சட்டத்தினை மீறுவோருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் விசேட பணிகள் அங்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என தீர்மானம் எடுக்கப்பட்டது. இந்த தீர்மானத்துக்கமைய இன்று முதல் ஒரு வாரகாலத்துக்கு இந்த நடைமுறை இருக்கும் என அவர் தெரிவித்தார்.

# சாவகச்சேரி சந்தைப் படுகொலையின் 33 ஆம் ஆண்டு நினைவு நாள் கடந்த 27 செவ்வாய்க்கிழமை ஆகும்

சமாதானப் படை என்று இலங்கைக்குச் சென்ற இந்தியப் விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு எம்.ஐ-24 ரக உலங்குவானுர்திகள் சூரன் வீதியுலா வந்துகொண்டிருந்த மக்கள் மீது கண்முடித்தனமாக றொக்கற் தாக்குதலைமேற்கொண்டன. றொக்கட் குண்டுகளால் சந்தைப்பகுதியில் நின்றவர்கள் மற்றும் வீதியுலா வந்த மக்கள் 68 அப்பாவி மக்கள் உயிரிழந்தனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குத் திசையில் யாழ் நகரையும், வன்னிப் பெருநிலப்பரப்பையும் இணைப்பது தென்மராட்சிப் பிரதேசமாகும். யாழ்-கண்டி பிரதான நெடுஞ்சாலையில் யாழ். நகரத்திலிருந்து ஏறக்குறைய பதினைந்து கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள சாவகச்சேரி நகரமானது, தென்மராட்சிப் பிரதேசத்தின் பிரதான நகரமாகும்.

தென்மராட்சி மக்களின் பிரதான சந்தை இங்கேயே அமைந்துள்ளது. எப்போதும் மக்கள் நடமாட்டம் கூடுதலாக உள்ள நகரமாகும். 1987 ஒக்டோபர் 27 ம் திகதி கந்தசட்டி கடைசி நாளாகும். மதியம் 12 மணியளவில் நகரத்தின் வழியாக சூரன் போருக்குரிய சூரன் அவ்வீதியால் கோயிலுக்கு சென்றுகொண்டிருந்தது. ஏராளமான பக்தர்களுடன் வீதியுலா வந்த சூரன் நகரத்தின் மையப்பகுதிக்க வந்துகொண்டிருந்தது. அவ்வேளை இந்தியப்படைக்கு சொந்தமான இரண்டு எம்.ஐ-24 ரக உலங்குவானுர்தி (முதலைக்கெலி) வீதியுலா வந்துகொண்டிருந்த மக்கள் மீது கண்முடித்தனமாக றொக்கற் தாக்குதலைமேற்கொண்டது. றொக்கட் குண்டுகளால் சந்தைப்பகுதியில் நின்ற, வீதியுலா வந்த மக்கள் 68 பேர் உயிரிழந்தனர்.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் "நாங்கள் சூரனுடன் விதியுலா வந்து கொண்டிருந்தோம். தீடீரென இரண்டு உலங்கு வானுர்திகள் நகரத்தை வட்டமிட்டது. நாங்கள் சூரனுடன் வீதியுலா வந்ததாலும் பெருமளவிலான மக்கள் நின்றதாலும் இந்திய இராணுவத்தின் முதலைக்கெலியைக்கண்டு பதறாமால் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தோம். ஆனால் திடீரென வெடிச்சத்தங்கள் கேட்ட திகைப்படைந்த எல்லோரும் என்ன செய்வதென்று தெரியாமல் சிதறி ஓடினார்கள், சிலர் படுத்தார்கள், சிலர் கையை உயர்த்தி காட்டினார்கள். ஆனால் இந்தியக் கெலிகளின் தாக்குதலின் உக்கிரம் குறையவில்லை. அந்தந்த இடங்களிலேயே பலர் உடல்சிதறி பலியானார்கள். வீதியுலா வந்த சூரனும் சிதைந்தது. காயமடைந்தவர்களை யாழ் வைத்தியசாலைக்கம் எடுத்து செல்லமுடியவில்லை. சரியான சிகிச்சை வழங்கமுடியாமல் பலர் உயிரிழந்தனர் என்றார்".

அப்பாவிகள் மீது தாக்கதல் நடத்தியதற்கு ஏதாவது காரணமிருக்கதா? என கேட்டதற்கு. "குறிப்பிட்டுச்சொல்லக்கூடிய காரணங்கள் ஏதுவுமில்லை. அப்பகுதியில் சண்டையும் நடக்கவில்லை. அருகில் இராணுவ முகாம்களும் இருக்கவில்லை. சம்பவதினம் காலை நாவக்குழியிலிருந்து முன்னேறிய இராணுவம் படைகள் கோப்பாய் வெளியினுடாக முன்னேற முயன்றபோது பாரிய இழப்பை சந்தித்தனர். இதன்போது பல நூற்றுக்கனக்கான இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் அதற்கு பழிவாங்கும் நோக்குடனேயே மக்களை இலக்கு வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம், வேறு குறிப்பிடக்கூடிய காரணங்கள் எதுவுமில்லை" என எதிர்வுகூறினார்.

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கேற்பட்ட இழப்பிற்காக பழிவாங்கும் நோக்குடன் இந்திய இராணுவ முதலைக்கெலிகளால் நடாத்தப்பட்ட இப்பொது மக்கள் அழிப்பு சம்பவத்தில் 68 பொது மக்கள் கொல்லப்பட்டதுடன் 175 க்க மேற்பட்டவாக்ள் காயமடைந்ததனர். இந்தியப்படைகள் திட்டமிட்டு மேற்கொண்ட படுகொலைச்சம்பவங்களில் தென்மராட்சி மக்களால் மறக்க முடியாத சம்பவங்களில் இதுவுமொன்றாகும்.



### யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்:

# முஸ்லிம் பிரதிநிதிகள் 20ஆவது திருத்தத்தை ஆதரித்தது ஏன்?

20ஆவது திருத்தத்தை நிறைவேற்றத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு ஒரு மலையக பிரதிநிதியும் எழு முஸ்லிம் பிரதிநிதிகளும் உதவியிருக்கிறார்கள். இது தொடர்பில் முஸ்லிம் சமூகத்தின் மத்தியிலேயே ஆங்காங்கே விமர்சனங்களை காணக்கூடியதாக இருக்கிறது "முஸ்லிம்கள் "தொப்பி பிரட்டிகள்" என்று பெரும்பான்மை சமூகத்தினர் எம்மை அடிக்கடி விமர்சிப்பார்கள். இவர்கள் இவ்வாறு விமர்சிப்பதை இந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்மை என நிரூபித்துள்ளனர்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் கூறியுள்ளார்.

முகநூலில் முஸ்லிம் நண்பர்கள் தமது பிரதிநிதிகளைக் கடுமையாகத் திட்டி எழுதும் ஒரு நிலைமையை காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால் முஸ்லிம் பிரதிநிதிகள் 20ஆவது திருத்தத்தை ஆதரிப்பது என்ற முடிவு தற்செயலானது அல்ல. அல்லது பொதுவாக நம்பப்படுவது போல அதில் பதவி மற்றும் பணம் சம்பந்தப்பட்ட பேரங்கல் இருந்தன என்ற கூற்றும் முழுமையானது அல்ல. தலைவர்கள் எதிராக வாக்களிக்க ஏனைய உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர் என்பதும் தற்செயலானது அல்ல. எல்லாமே நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒரு நாடகத்தின் பிரதிதான்.

முஸ்லிம் பிரதிநிதிகள் ஏன் அவ்வாறு வாக்களித்தார்கள்? ஒரே வரியில் சொன்னால் தற்காப்பு. அதுதான் உண்மை. முஸ்லிம் சமூகம் பெருமளவிற்கு தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. ஈஸ்டர் குண்டுவெடிப்பு அந்த சமூகத்தை முழுக்க முழுக்க பாதுகாப்பற்ற காப்பாற்ற யாரும் இல்லாத ஒரு இடத்துக்கு கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

கடந்த சில தசாப்தங்களாக முஸ்லிம் பிரதிநிதிகளில் பெரும்பாலானவர்கள் எதிர்ப்பு அரசியலில் ஈடுபடத் தயாரில்லை. இணக்க அரசியலே அவர்களுடைய ஒரே விருப்பத் தெரிவாக இருந்தது. தமிழ் இயக்கங்களில் சில முஸ்லிம் இளைஞர்கள் இணைந்தார்கள் ஆனால் அது ஒரு சமூகத்தின் பங்களிப்பு அல்ல. முஸ்லிம் சமூகம் இலங்கை தீவை பொறுத்தவரை இணக்க அரசியலையே ஒரே விருப்பத் தெரிவாக கொண்டிருந்தது. கொண்டிருக்கிறது.

எதிர்ப்பு அரசியலை அவர்கள் அனேகமாக முன்னெடுக்க முடியாத ஒரு சமூக யதார்த்தம் அவர்களுக்கு உண்டு. வடக்கில் அவர்கள் சிறுபான்மை. கிழக்கில் அவர்கள் தேங்காய்ப் பூவும் பிட்டும் போல தமிழ் குடியிருப்புக்களோடு கலந்து வாழ்கிறார்கள். தெற்கில் அவர்கள் கஞ்சிக்குள் பயற்றைப் போல கலந்து வாழ்கிறார்கள். அவர்களுடைய பிரதான வருமான வழி வர்த்தககமே என்ற அடிப்படையில் மொழி கடந்து இனம் கடந்து சந்தைகளைச் சமாளிக்க வேண்டிய ஒரு தேவை அவர்களுக்கு உண்டு. இதுவும் அவர்களுடைய இணக்க அரசியலின் ஒரு பகுதிதான்.

யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம்கள் வலிந்து அகற்றப்பட்ட பின் பொருளாதாரத் தடை மேலும் இறுக்கப்பட்ட பொழுது அரசியல் ஆய்வாளர் மு திருநாவுக்கரசு ஒருமுறை சொன்னார்.... "முஸ்லிம் சமூகம் வடக்கில் இருந்திருந்தால் பொருளாதாரத் தடை வெற்றி பெற்றிருக்காது. ஏனென்றால் எந்த ரகசிய வழி ஊடாக எதை எப்பொழுது கொண்டு வரவேண்டும் என்று அவர்களுக்கு தெரியும். அவர்கள் பொருளாதார தடையை உடைத்திருப்பார்கள்" என்று. இவ்வாறு இலங்கைத் தீவில் இரண்டு பெரிய தேசிய இனங்களுக்கும் இடையில் தமது அரசியலை வெற்றிகரமாக முன்னெடுத்த முஸ்லிம்களுக்கு முதலில் சோதனையாக வந்தது ஆயுதப் போராட்டம்தான்.

எனினும் ஆயுதப் போராட்டத்தை விடவும் அதிகரித்த சோதனையை அவர்களுக்கு கொடுத்தது ஈஸ்டர் குண்டு வெடிப்புத்தான். ஆயுதப் போராட்டத்தின் போது அவர்களை சிங்கள் மக்கள் அரவணைத்தார்கள். ஆனால் ஈஸ்டர் குண்டு வெடிப்பின் பின் அவர்களுக்கு அந்த அரவணைப்பு இருக்கவில்லை.

முஸ்லிம் சமூகம் முன்னெப்பொழுதும் அந்தளவுக்கு அச்சுறுத்தலை எதிர் கொண்டதில்லை. அந்தளவுக்கு பாதுகாப்பின்மையை அவமானத்தை அனுபவித்ததில்லை. சமூகத்தின் ஒரு சிறு பகுதி புரிந்த வன்முறைக்காக முழுச் சமூகத்தையும் சந்தேகிக்கும் ஒரு நிலைமையை சஹிரான் ஏற்படுத்தினார். தனது
யுத்த வெற்றி வாதத்தை புதுப்பிப்பதற்கு ஈஸ்டர் குண்டுவெடிப்பைக் கையில் எடுத்த ராஜபக்சக்கள் முஸ்லிம் எதிர்ப்பை மேலும் தீவிரப்படுத்தினார்கள்.

ஏற்கனவே தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின் ராஜபக்சக்களின் உற்பத்தியாகப் பார்க்கப்டும் பொதுபலசேனா போன்ற தீவிர பௌத்த மத அமைப்புக்கள் முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தலான ஓர் அரசியல் சூழலையும் வணிகச் சூழலையும் ஏற்படுத்தினார்கள். அதன் விளைவாக 2009க்கு பின் முஸ்லிம்களின் பொருளாதார இலக்குகள் திட்டமிட்டு தாக்கப்பட்டன. ஈஸ்டர் குண்டுவெடிப்பு இது விடயத்தில் முஸ்லிம்களை முழுக்க முழுக்க பாதுகாப்பற்ற ஒரு நிலைக்குத் தள்ளியது. அதன் தாக்கத்தில் இருந்து இன்றுவரை முஸ்லிம் சமூகம் விடுபடவில்லை.

ஈஸ்டர் குண்டு வெடிப்பு தொடர்பான விசாரணை குழுவில் முஸ்லிம் பிரமுகர்கள் அளித்துவரும் வாக்குமூலங்கள் அதை நிரூபிக்கின்றன. தங்களுக்கும் தீவிரவாதத்திற்கும் இடையில் தொடர்பு இல்லை என்று நிரூபிப்பதற்கான பிரயத்தனங்களாகவே அவர்களுடைய வாக்குமூலங்கள் காணப்படுகின்றன. அதில் ஒரு சரணாகதியும் காணப்படுகிறது.. நாங்கள் முழு இலங்கைத் தீவுக்குள் இணக்கமாக வாழ விரும்புகிறோம் அதற்காக தீவிரவாதிகளை காட்டிக் கொடுக்கவும் தயாராக இருக்கிறோம் என்ற செய்தியை குண்டுவெடிப்புக்கு முன்னரே முஸ்லிம் சமூகம் துலக்கமாக வெளிக்காட்டி இருக்கிறது. எனவே ஈஸ்டர் குண்டுவெடிப்பு முஸ்லிம்களை முழு அளவுக்கு தற்காப்பு நிலைக்குத் தள்ளி விட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பின்னணியில் வைத்துதான் தான் முஸ்லிம் பிரதிநிதிகள் 20ஆவது திருத்தத்தை ஆதரித்ததை விளங்கிக் கொள்ள வேண்டும்.

சில கிழமைகளுக்கு முன்பு வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் நினைவு கூர்தலுக்கான உரிமையை வேண்டி கடையடைப்பை அனுஷ்டித்த பொழுது அங்கிருந்த முஸ்லீம் வணிகர்களும் தமது ஆதரவைக் காட்டினார்கள். ஆனால் 20 ஆவது திருத்தத்திற்கு அவர்களுடைய பிரதிநிதிகள் ஆதரவாக வாக்களித்திருக்கிறார்கள். தேர்தல் மேடைகளில் அவர்கள் ராஜபக்சக்களுக்கு எதிராகவே உரையாற்றினார்கள். வாக்காளர்கள் மத்தியில் காணப்பட்ட அச்சத்தையும் பாதுகாப்பின்மையும் நன்கு பயன்படுத்தியே வாக்குகளைத் திரட்டினார்கள். ஆனால் அதே அச்சத்தையும் பாதுகாப்பற்ற சூழலையும் மேலும் அதிகப்படுத்தக்கூடிய ஒரு யாப்பு திருத்தத்துக்கு வாக்களித்திருக்கிறார்கள்.

எதிர்க்கட்சிகளை பொறுத்தவரை இது ஒரு காட்டிக்கொடுப்பு ஜனநாயகத்தை நேசிக்கும் சக்திகளை பொருத்தவரை இது ஒரு காட்டிக்கொடுப்பு. ஆனால் முஸ்லிம் பிரதிநிதிகளை பொறுத்தவரை அவர்களுக்கு இதை விட வேறு வழி இல்லை. ஏனெனில் முஸ்லிம் சமூகம் எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கும் நிலையில் இல்லை. அவ்வாறு எதிர்ப்பு அரசியலை முன்னெடுத்தால் அது முளையிலேயே நசுக்கப்படும் ஒரு நிலைமைதான் இலங்கைதீவில் உண்டு.

முஸ்லீம் சமூகத்துக்கு இலங்கைக்கு வெளியே அயலில் பலமான பின் தளம் கிடையாது. தமிழ் மக்களுக்கு உள்ளதை போன்று பலமான புலம்பெயர் சமூகமும் கிடையாது. எல்லாவற்றையும் விட முக்கியமாக நாட்டுக்குள் அவர்கள் இரண்டு பெரிய தேசிய இனங்களோடும் கலந்து காணப்படுகிறார்கள். தமிழ் மக்களோடு அவர்களுடைய உறவு ஏற்கனவே சீர்கெட்டிருக்கிறது.

இது தொடர்பில் ஈஸ்டர் குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணை குழுவில் ரணில் விக்கிரமசிங்க கூறியதை இங்கு சுட்டிக்காட்டலாம் "முஸ்லிம்களை தமிழர்களிடமிருந்து பிரித்து, தனியான தரப்பாக அடையாளப்படுத்தியது மறைமுக தந்திரோபாய வியூகம். இதன் மூலம் யுத்தத்தின் போது உளவுத் தகவல்களை பெறுவது இலகுவானது".

அதாவது இரண்டு சிறிய தேசிய இனங்களையும் மோத விடுவதில் பெரிய தேசிய இனம் கணிசமான அளவு வெற்றியை பெற்று விட்டது. இதனால் முஸ்லிம்கள் தமிழ் மக்களை நோக்கி வர முடியாத ஒரு அரசியல் சூழ்நிலை இலங்கைத்தீவில் இப்பொழுதும் உண்டு. இந்நிலையில் ஒடுக்குமுறைக்கு எதிராக இரண்டு சிறிய தேசிய இனங்களும் போராடும் ஓர் அரசியல் தெரிவை மேற்கொள்ள முஸ்லிம்களால் முடியாதிருக்கிறது. அதேசமயம் தன்னை அவமானகரமான விதங்களில் துன்புறுத்துகின்ற பெரிய தேசிய இனத்தோடு அவர்களால் இணைந்து வாழவும் முடியாது. எனவே தன்னை விடப் பெரிய இரண்டு இனங்களுக்கும் பயப்படும் ஒரு மிகச் சிறிய தேசிய இனம் என்ன தெரிவை எடுக்கலாம்?

அவர்கள் அப்படி முடிவெடுக்க வேண்டும் என்று திட்டமிட்டு ராஜபக்சக்கள் முதலில் ரிசாத்தின் சகோதரரைக் கைது செய்தார்கள். அவர் மீது வைத்த அனைத்து குற்றச்சாட்டுகளுக்கும் மாறாக அவரை விடுதலை செய்தார்கள். பின்னர் ரிஷாத்தைக் கைது செய்தார்கள். அவரை கோவிட்-19 உடுப்போடு நாடாளுமன்றத்துக்கு அழைத்துக் கொண்டு வந்தார்கள். அதன் மூலம் முஸ்லிம் சமூகத்துக்கு அவர்கள் ஒரு செய்தியைக் கூற முயன்றார்கள். அந்த செய்தியை முஸ்லிம் பிரதிநிதிகள் உள்வாங்கிக் கொண்டார்கள். அதற்கு முன்னரே அவர்கள் முடிவெடுத்து விட்டார்கள். அந்த முடிவு அவர்களுடைய இணக்க அரசியலை ஈஸ்டர் குண்டுவெடிப்புக்கு பின்னரான நிலைமைகளுக்கு ஏற்ப எப்படி சுதாகரித்துக்
கொள்வது என்பதுதான்.

இந்த இடத்தில் ஒரு கேள்வி எழும். முஸ்லிம்கள் எதிர்ப்பு அரசியலுக்கே போக மாட்டார்கள் என்று சொன்னால் 2018 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன ஆட்சியை குழப்பிய பொழுது அனைத்து முஸ்லிம் பிரதிநிதிகளும் தமிழ் சிங்கள தரப்புக்களுடன் நின்று ராஜபக்சவை தோற்கடித்தது எப்படி? ஏனென்றால், அக்கால கட்டத்தில் ஒப்பீட்டளவில் அதிகரித்த ஒரு ஜனநாயகச் சூழல் இருந்தது.

ஜனநாயகத்திற்காக சிங்கள-தமிழ் தரப்புக்களோடு ஐக்கியமாக நிற்பதன் மூலம் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்று முஸ்லிம்கள் நம்பினார்கள். அவ்வாறு ஐக்கியப்பட்டு நிற்பதால் ராஜபக்சக்களைத் தோற்கடிக்கலாம் என்று அவர்கள் நம்பினார்கள். அந்த நம்பிக்கையே அந்த ஐக்கியத்திற்கு காரணம். ஆனால் பின்னர் நிகழ்ந்த தேர்தலில் ராஜபக்சவை பெற்ற வெற்றியானது அப்படி நம்பிக்கொண்டு இனிமேலும் அவர்களை எதிர்க்க முடியாது என்ற எச்சரிக்கை உணர்வை அவர்களுக்கு கொடுத்திருக்கிறது. குறிப்பாக ஜனாதிபதி தேர்தலில் இருந்து நாடாளுமன்ற தேர்தல் வரையிலுமான காலகட்டத்தில் ராஜபக்சக்கள் முஸ்லிம் சமூகத்தை அணுகிய விதம் அவ்வாறான சமிக்கைகளைத்தான் வெளிப்படுத்தியது.

எனவே கோவிட்-19க்குப் பின்னரான இணக்க அரசியல் இப்படித்தான் அமைய முடியும். முஸ்லிம் பிரதிநிதிகள் எடுத்த முடிவை அவர்களுடைய தற்காப்பு உணர்வுக்கூடாகவே விளங்கிக் கொள்ள வேண்டும்.



Preparation of Income Taxes
T1 and T2 with E/File

Location :
Unit 9- 40 Winges Road
Woodbridge, ON
L4L 6B2

Pearl Fortune Canada
Head Office
101 Laird Drive, Markham,
Ontario L3S 3N6
Office Number 905-554-5606
Fax Number 905-554-3236



Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

# பெயரளவில் மாத்திரமே 'மாதிரி கிராமம்'

- சிவா பரமேஸ்வரன் (மூத்த செய்தியாளர்)

இலங்கையில் உள்நாட்டுப் போரினால் கடுமையாக பாதிக்கப்பட்டு இன்னும் முழுமையான இயல்பு நிலைக்குத் திரும்பாத முல்லைத்தீவு மாவட்டத்தின் மறுபெயர் "துன்ப நகர்" என்று சொல்வதில் தவறிருக்க முடியாது.







நாட்டிலேயே அதிகப்படியான சோதனைச் சாவடிகள், அதிகரித்த இராணுவப் பிரசன்னம், நெருக்கடிகளுக்கிடையே வாழும் மீனவ சமூகம் எனப் பட்டியல் தொடரும்.

இங்கிருக்கும் மக்களுக்காக ஒரு உதாரண முன்னெடுப்பாக மைத்திரி-ரணில் அரசில் வீட்டுவசதித்துறை அமைச்சராகவும் தற்போது எதிர்க்கட்சித் தலைவராகவும் உள்ள சஜித் பிரேமதாஸ முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரிவில் ஒரு மாதிரி கிராமத்தை அமைக்க உறுதியளித்தார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிட்ட போது இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என வாக்குறுதி அளித்தார் சஜித் பிரேமதாச. ஆனால் இந்த மாதிரி கிராமம் இன்று கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முத்தையன்கட்டுக்குளம் கிராமம் போர்க்காலப் பேரழிவுகளுக்கு ஒரு சாட்சி. போர் முடிந்து ஒரு தசாப்தம் ஆகியும் அங்குள்ள பெரும்பாலான மக்கள் போரின் வடுக்கள் மற்றும் மனரீதியான பாதிப்பிலிருந்து வெளிவரவில்லை.

இங்குள்ள மீனவர்களுக்கு வாழ்வாதாரம் என்பது சூனியமாகியுள்ளது, அவர்களது அன்றாட வாழ்வாதாரம் மிகப்பெரும் சவால்களைக் கொண்டதாகவுள்ளது என்று அங்கு சென்று வந்த தன்னார்வலர்கள் கூறுகின்றனர்.

அந்தக் கிராமத்திலுள்ள மக்களுக்கு வீடு என்பது தலைக்கு மேலே இரண்டு தகரங்களும் சுற்றிலும் நான்கு தகரங்களும் அவ்வளவே. போரினால் சீரழிந்த வீடுகளை மீண்டும் திருத்தியமைக்க முடியாத நிலையில் அங்குள்ள மக்கள் உள்ளனர் என்று நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில் கடந்த வீடமைப்பு அமைச்சராக இருந்த சஜித் பிரேமதாச அங்குள்ள மீனவர்களுக்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மூலமாக 20 வீடுகளைக் கொண்ட மாதிரி கிராமத்தை அமைக்க அனுமதியளித்தார்.

இதனடிப்படையில் முதற்கட்டமாக கால் ஏக்கர் நிலம் அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு அளிக்கப்பட்டு ஆரம்பகட்டமாக 250,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டது. அதைக் கொண்டு பயனாளிகள் வீடுகளைக் கட்டும் பணியைத் தொடங்கினர்.

### கைவிடப்பட்ட நிலை

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தலுக்குப் பிறகு ஆட்சி மாறவும் காட்சிகளும் மாற ஆரம்பித்தன. சஜித் பிரேமதாசவால் வீடுகட்ட உறுதியளிக்கப்பட்ட அடுத்தகட்ட நிதியுதவிகள் கிடைக்காத சூழலில் வீட்டுத் திட்டம் முடங்கிப் போனது. அது மட்டுமின்றி முதல் தவணையாக அளிக்கப்பட்ட பணத்தில் முன்னெடுக்கப்பட்ட அடிப்படை பணிகளும் பருவ மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டன. அவை தற்போது இடிந்துவிழும் நிலையில் உள்ளதை அங்கிருந்து கிடைக்கப்பெற்றப் படங்கள் காட்டுகின்றன.

பெரும் இக்கட்டுக்கு இடையே வாழ்ந்து வரும் அந்த "மாதிரி கிராமத்தின்" மீனவர்கள் பருவ மழை மற்று இயற்கை இன்னல்கள் காரணமாக அங்கிருந்து வெளியேறினால் தமக்கு வீடு கிடைக்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விடும் எனும் அச்சம் காரணமாக அங்கு தொடர்ந்து இருக்கும் சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ராஜபக்ஷ்கள் தலைமையிலான அரசு இந்தத் திட்டத்தை முன்னெடுக்கும் எனும் நம்பிக்கை தங்களுக்கு இல்லை என்று ஜீவநகர் "மாதிரி கிராம" கூறுகின்றனர். அதிகாரபூர்வமற்ற முறையில் இந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளதாகவே அவர்கள் எண்ணுகிறார்கள்.

### சொல்லொணா துன்பங்கள்

இருக்கும் இடத்தைவிட்டு வெளியேறினால் கிடைக்கக் கூடிய வீடும் கிடைக்காமல் போய்விடுமோ எனும் அச்சம் காரணமாக அந்த கிராம மக்கள் இயற்கை உபாதைகளைக் கழிக்கத் தன்மானத்தை விட்டு அருகிலுள்ள காட்டுப்பகுதிக்கு ஒதுங்க வேண்டிய துர்பாக்கியமான நிலைக்கு ஆளாகியுள்ளனர். சிறார்கள், பெண்கள், முதியோர் மற்றும் கர்ப்பிணிகள் ஆகியோர் கடும் கோடை மற்றும் மழைக் காலங்களில் இதனால் சொல்லொணா துன்பங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

உத்தரவாதம் அளிக்கப்பட்டபடி அரசு தமக்கு மலசலக்கூட வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்று உள்ளூர் வாசிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். அத்தியாவசியத் தேவையான இதற்கு அப்பாற்பட்டு சாலை வசதிகளும் சீரான மின்சார விநியோகமின்மையும் அவர்களது அன்றாட வாழ்க்கையை மேலும் நெருக்கடிகளுக்குள் தள்ளியுள்ளது. அடிப்படை வாழ்வாதார தேவைகளில் ஒன்றான குடிநீருக்கு அவர்கள் குறைந்தபட்சம் அரை கிலோமீட்டர் வரை பயணிக்க வேண்டியுள்ளது. பொதுக் கிணற்றில் பல நேரங்களில் நீர் மிகவும் ஆழத்தில் உள்ளதால் அதுவும் பிரச்சனையாக இருக்கிறது என்கிறார்கள் அந்த "மாதிரி கிராமத்தை" எதிர்நோக்கியுள்ள மீனவ மக்கள். தமது பகுதியில் பொதுக் கிணறு இல்லாததால் இதர தேவைகளுக்காக வெகுதூரம் பயணிக்க வேண்டும் என்பதற்கு அப்பாற்பட்டு வறுமைக்கிடையே குடிநீரை வில்லை கொடுத்து வாங்க வேண்டிய நிலையில் தாங்கள் உள்ளதாக ஹஉதயனிடம்ஹ பேசிய சிலர் தெரிவித்தனர்.

கொரோனா தொற்று காலத்தில் சுத்தமான குடிநீர் மற்றும் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக தமக்கு சுகாதாரம் பற்றிய கவலைகள் உள்ளன என்று அவர்கள் அஞ்சுகின்றனர்.

### "நடவடிக்கை எடுக்கப்படுகிறது"

எனினும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் கே.விமலநாதன் இந்தப் பிரச்சனைகள் தனது கவனத்திற்கு வந்துள்ளன என்கிறார். "ஜீவநகர் பகுதி மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கட்டி முடிக்கப்படாத வீடுகள் மற்றும் குடிநீர், சாலைகள், மின்சாரம், மலசலக் கூடம் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமை மற்றும் அவர்கள் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் சொல்லொணா துன்பங்கள் எமது பார்வைக்கு வந்துள்ளன".

தனது அதிகாரிகளுடன் அந்தப் பகுதிக்கு விஜயம் செய்து நிலைமைகளைக் கண்டறிந்துள்ளதாகவும் அரசாங்க அதிபர். "அங்குள்ள மக்களின் நிலை மிகவும் பரிதாபமாக உள்ளது. முடிந்தால் இந்த ஆண்டோ அல்லது அடுத்த ஆண்டோ அங்கு பொதுக் கிணறு தோண்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும், அதேபோல மலசலகூட வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்."

சாலைகள் அமைக்கவும், மின்சார விநியோகத்தை சீர் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று கூறும் அவர், அதற்கான நிதியைக் கோரியுள்ளதாகவும் அவை கிடைத்தவுடன் உடனடியாக பணிகள் தொடங்கும் என்கிறார்.

### அச்சத்தில் வாழ்க்கை

நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று அரசு கூறினாலும், மக்களிடையே அவநம்பிக்கை வெளிப்படுகிறது. இரவு நேரங்களில் வெளிச்சம் இல்லாததால் வி'ப் பூச்சிகள் மற்றும் காட்டு மிருகங்களினால் ஏற்படக் கூடிய அச்சத்திலேயே தாங்கள் வாழ்வதாக அவர்கள் ஹஉதயனிடம்ஹ கூறினார்கள்.

"இப்போதுள்ள குடிசை வீடுகளும் காட்டு யானைகளால் சேதமாக்கப்படுகின்றன, விவசாயப் பொருட்களும் அவைகளால் உண்ணப்படுகின்றன" என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

புதிய அரசில் வெங்காயத்துக்கும், வெற்றிலைக்கும் அமைச்சுகள் ஏற்படுத்தப்பட்டு அமைச்சர்கள் நியமிக்கப்படும் நிலையில், இருபது வீடுகளைக் கொண்ட மிகச்சிறிய "மாதிரி கிராமம்" திட்டத்துக்கு போதிய நிதியை அரசால் ஏன் ஒதுக்க முடியாது என்று ஜீவநகர் மக்கள் வினவுகின்றனர்.

"எமது வாழ்வாதாரம் அரசியலில் சிக்கித் தவிக்கிறது". உள்ளூர் அரசியல்வாதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் தமக்காக போதிய அளவில் குரல் கொடுப்பதில்லை என்கிறார்கள் முத்தையன்கட்டுப் பகுதி மக்கள்.

கண்டா, பிரித்தானியா, ஆஸ்திரேலியா, சுவிஸ் போன்ற நாடுகளிலுள்ள ஈழத் தமிழர்கள் தமக்கு உதவ முன்வர வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர். போர்க் காலத்துக்குப் பிறகு தாங்கள் "மறக்கப்பட்ட சனங்களாகவே" இருக்கிறோம் என்று அப்பகுதியைச் சேர்ந்த பெரும்பாலான அனைவரும் ஒருமித்த குரலில் தங்களது வேதனையை வெளிப்படுத்துகின்றனர். போர்க் காலத்தில் தமது குடும்பத்தார் செய்த பங்களிப்புகளை புலம்பெயர்ந்த தமிழர்கள் மறந்துவிட்டனர் என்று பலர் தெரிவித்தனர்.

இது கசப்பான உண்மை என்பதை ஏற்காமல் இருக்க முடியாது. முல்லைத்தீவு மக்களைப் பொருத்தவரை "பட்ட காலிலேயே படும்" என்பதை யதார்த்தமாகப் பார்க்க முடிகிறது.

## வீணாவின் கிறுக்கல்

போர் முனை ஓலங்களை
தோற்கடித்தது
இன்று பார் முழுதும்
கேட்கும் ஓலம்,
தீட்டிய வாழ்முனையை விட
கண்முன் தெரியா கிருமியே
உன் வீரியம் அதிகம்,
முன் நின்று போரிடும்
எதிரியை அழிக்கலாம்,
ஆனால் உரு இல்லா உன்னை
அழிப்பது எப்படி?
அடுத்தவனை துன்புறுத்தி
வாழ்பவனுக்கு ஆயுள் குறைவு,
நீயும் அழிந்திடுவாய்
வெகுவிரைவில்!
என நம்புகிறேன்.

# Carefirst Family Health Team

## Accepting New Patients



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com






நிதியுதவி:
Canada
United Way Greater Toronto

# ரொறொன்ரோ பெரும்பாகத் தெற்காசியர்களுக்கான கோவிட் - 19 (COVID-19) தொலைபேசி உதவித் தொடர்பு

# 647-846-2233



ரொறொன்ரோ பெரும்பாகத்துக்கு வெளியிலிருந்து அழைப்பவர்களுக்கான கட்டணமற்ற தொலைபேசி எண்: 1-866-300-3454

கோவிட் - 19 பற்றிய தகவல்கள்: சுகாதாரமும் பாதுகாப்பும், அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவிகள், ஆதரவுச் சேவைகள், மீளத் திறப்புக்கான நடைமுறைகள், உணவுப் பாதுகாப்பு

பதிவு செய்யப்பட்ட தகவல்களையும் மற்றும் நிபுணர்களிடமிருந்து தகவல்களை நேரடியாகவும் ஆங்கிலம், உருது, இந்தி, தமிழ், பஞ்சாபி, வங்காளம் ஆகிய மொழிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

CASSA · SALCO South Asian Legal Clinic of Ontario · BCS · Tamil Canadian Centre for Civic Action · pchs Serving Diverse Communities · South Asian Women's Rights Organization


Amma
Brand
இப்பொழுது கனடாவிலும்
கிடைக்கின்றது!


Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE
WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
100% Natural
NOW IN CANADA
Amma
Apple Cider
with Mother Vinegar
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471


Premium Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
750ml
375ml


Amma
Herbal
Juices
NOW
IN
CANADA
Jamun with Karela Juice
Aloe Vera Juice
Karela Juice
Amla Juice
Super Energizer
Neem Leaf with Aloe Vera Juice
Body Pain Relax Juice
with Aloe Vera
Aloe Noni
with Aloevera
Juice
100% HERBAL
100% NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471




## நான் கனடாவுக்கு புதியவர்.
## நான் வீடு வாங்க முடியுமா?

தெரிவு செய்யப்பட்ட வங்கிகளில் உள்ள எங்கள் மொழி ஆலோசகர்கள் உரையாடுவார்கள் அல்லது புதிய வாடிக்கையாளர்களுக்கான எங்கள் சலுகைகளை இணையத்தில் தேடுங்கள்.

ஒரு அடமானம் பெறுங்கள் மேலும் நீங்கள் அதில் **$3000** வரை **Cashback** பெறலாம் *

உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க நாங்கள் இருக்கின்றோம்

**nbc.ca**/tamil

* Offer valid until November 30, 2020. The mortgage loan must have a fixed or variable rate with of 4 years or longer at the current promotional rate. The cashback amount varies according to the amount of the loan: $1,000 cash back for loans between $100,000 and $249,999, $1 500 cash back for loans between $250,000 and $499,999, $2 500 cash back for loans between $500,000 and $749,999, and $3,000 cash back for loans above $750,000. Commitment required to maintain your loan for the duration of the term. Subject to National Bank credit approval. Certain conditions apply.

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# SKN FINANCIAL

www.sknfinancial.com



அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

**கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்**

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மனைஸ்ன வாங்குவதில் பணச்சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..[2% முதல்]
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

மலேசிய மடல்:

# மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறையின் 15–ஆவது தலைவர் முனைவர் மணிமாறன் சுப்பிரமணியன்




கோலாலம்பூர், அக்.30:

மலேசியா, மலேசியாவை அடுத்துள்ள சிங்கப்பூர் நாடுகளைக் கடந்து, தமிழினத்தின் தொப்புள்கொடி உறவுகள் படர்ந்துள்ள நாடுகள் எங்கெங்கும் தமிழியக் கூறுகளையும் விழுமியங்களையும் வளர்த்தெடுக்க வேண்டிய கடப்பாட்டை மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை கொண்டுள்ளது என்று அதன் புதிய தலைவர் சு. மணிமாறன் தெரிவித்துள்ளார்.

மலேசியாவின் மூத்த உயர்க்கல்வி நிறுவனமான மலாயா பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள இந்திய ஆய்வியல் துறையின் 15-ஆவது தலைவராக முனைவர் மணிமாறன் சுப்பிரமணியம் பொறுப்பேற்றுள்ளார்.

மலேசிய இந்தியர்களின், குறிப்பாக தமிழர்களின் தாய்மொழி, வியர்வையும் இரத்தமும் ஒன்றெனக் கலந்த தோட்டப்புற வாழ்க்கையின் தாக்கம், பண்பாடு, ஆன்மிகம், பன்னாட்டு கலாச்சாரம், அரசியல் தாக்கம், இசை உள்ளிட்ட கலை வடிவம் என யாவும் பிரதிபலிக்கும் மரபுசார் மையமாக விளங்குகிறது இந்திய ஆய்வியல் துறை. ஆனாலும் இதன் வடிவமும் கட்டமைப்பும் மிகச் சிறியதுதான்.

17 புலங்களை உள்ளடக்கியது இந்த உயர்க் கல்வி - கலாச்சாலை. இந்த பதினேழு புலங்களில் ஒன்றான மொழிப்புலத்தில் 12 துறைகள் இடம்பெற்றுள்ளன. இப்பன்னிரண்டு துறைகளில் ஒன்றுதான் இந்திய ஆய்வியல் துறை. இருந்தபோதும், இதன் பிம்பம் இத்தனை அளவிற்கு பிரமாண்டமாக காட்சி அளிப்பதற்கும் தோற்றம் பெறுவதற்கும் அதன் பங்களிப்புதான் காரணம்.



இந்தத் துறையை வழிநடத்தி வந்துள்ள் தலைவர்கள், மாணவர்களின் கல்வி என்னும் எல்லையைக் கடந்து, மலேசியவாழ் தமிழ் மக்களின் அத்துணைக் கூறுகளிலும் ஊடுறுவி, அவர்களின் அரசியல்-சமூக-பொருளியல் வாழ்வு சம்பந்தமான தளங்களிலும் தங்களின் மேலான பங்களிப்பை பங்கமின்றி வழங்கி வந்துள்ளனர்.

அந்த வரிசையில் புதிதாக இணைந்துள்ள மூத்த விரிவுரையாளரும் முனைவருமான சு.மணிமாறனை கனடாவில் புலம் பெயர்ந்த தமிழர்கள் சார்பில் வெளிவரும் உதயன் பருவ இதழ் வாழ்த்தி வரவேற்கிறது.

இதன் மேநாள் தலைவர் இணைப் பேராசிரியர் முனைவர் கிருஷ்ணன் மணியம், அப்பொறுப்பில் இருந்தும் பணியில் இருந்தும் ஓய்வு பெற்றதை அடுத்து முனைவர் மணிமாறன் இந்தத் தமிழாய்வியல் பிரிவிற்கு தலைமைப் பொறுப்பேற்று இருக்கிறார்.



கால சூழலுக்கு ஏற்ப நாட்டில் நிலவும் பல்வேறு மாற்றத்தை அவதானித்து, மலேசிய இந்தியர்களின் அடையாளமாகவும் தமிழ் மொழியின் அரணாகவும் இத்துறை தொடர்ந்து விளங்கும் வண்ணம் என்பணி தொடரும். அதற்கு ஏற்ப, என் முன்னோர்கள் வரையறுத்துள்ள பாதையை யொட்டி இடையறாது கடமை ஆற்றுவேன் என்று முனைவர் மணிமாறன் உதயன் இதழிடம் கருத்து தெரிவித்தார்.

இந்திய ஆய்வியல் துறையின் தலைவராகப் ஈராண்டுகளுக்கு பதவி வகிக்கப்போகும் இவர், "எதிர்காலத்தில் பல்வேறு மாற்றங்கள் இந்திய ஆய்வியல் துறையில் மேற்கொள்ளப்படும். பாடத் திட்டங்களை கவனத்தில் கொள்ளும் அதேவேளை, மாணவர்களின் எதிர்கால வாழ்வு குறித்தும் திட்டமிடப்படும். இதற்கு முந்தைய தலைவர்களும் தங்களால் ஆன அத்தனையையும் நிறைவேற்றி இருக்கின்ற வேளையில், நானும் என் பங்கிற்கு என்னால் ஆனமட்டில் கடமை ஆற்றுவேன்" என்று மணிமாறன் உதயனிடம் தெரிவித்தார்.

தென்கிழக்காசியாவில் இயங்கி வரும் ஒரே இந்திய ஆய்வியல் துறையான இதில், இதுவரை பேராசிரியர் இராஜாக்கண்ணு, பேராசிரியர் சேவியர் தனிநாயக அடிகளார், முனைவர் இராமசுப்பையா, பேராசிரியர் முனைவர் ச. சிங்காரவேலு, முனைவர் தேவபூபதி நடராஜா, முனைவர் ரெ. ராஜு, முனைவர் ரா. இராஜாகிரு‘ணன், முனைவர் சூசன் ஊர்ஜிதம், முனைவர் க. திலகவதி, பேராசிரியர் முனைவர் ந. கந்தசாமி, முனைவர் வே. சபாபதி, முனைவர். சு. குமரன், முனைவர் இரா. மோகனதாஸ், முனைவர் ம. கிரு‘ணன் ஆகியோர் கடமை ஆற்றி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



மலாயா பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையின் தலைவர் பதவியிலிருந்து இணைப் பேராசிரியர் முனைவர் கிருஷ்ணன் மணியம் நேற்று பணி ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, மூத்த விரிவுரையாளர், முனைவர் மணிமாறன் சுப்ரமணியம் அத்துறைக்கு புதிய தலைவராக பெறுபேற்று இருக்கின்றார்.

காலத்திற்கு ஏற்ற மாற்றத்துடன் மலேசியவாழ் தமிழர்களின் அடையாளமாகவும் தமிழ் மொழிக்கு காவல் அரணாகவும் இத்துறை தொடர்ந்து விளங்கும் என்று முனைவர் மணிமாறன் சுப்ரமணியம் உறுதி அளித்துள்ளார்.



இந்தத் தமிழ்ப் பிரிவிற்கு எண்ணற்ற வரலாற்றுச் சிறப்புகள் உண்டு. பன்னாட்டு மாநாடுகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள் என ஆண்டுதோறும் சிறப்பான நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். அந்த வகையில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 10-ஆவது பன்னாட்டு மாநாடு கடந்த 2007 ஜூலைத் திங்கள் 20, 21, 22 ஆகிய மூன்று தினங்களில் நடைபெற்றது.

அதில், 22-0702007இல் உரையாற்றிய கனடிய உதயன் பருவ இதழின் பொறுப்பாண்மை பிரதம ஆசிரியர் லோகேந்திர லிங்கன், சமய நல்லிணக்கம் தொடர்பான ஒரு கருத்தை முன் வைத்தார். இதுவரை எந்தத் தலைவரும் எங்கும் எந்த வேளையிலும் சொல்லாத செம்மாந்த கருத்து அது.

ஒரு மண்டபத்தில் நூறு தமிழர்கள் கூடி இருந்தார்கள் என்றால், உதாரணத்திற்கு அந்த நூறு தமிழர்களில் 99 பேர் சைவர்களாகவும் மற்றவர்களாகவும் இருந்து ஒரேயொருவர் கிறித்துவ தமிழராகவோ அல்லது இசுலாமியத் தமிழராகவோ இருந்தால் அந்த விழா மேடையில் இறை வணக்கம் பாடும்போது "தென்னாடு டைய சிவனே போற்றி" என்று பாடக்கூடாது.



காரணம், பெரும்பான்மைத் தமிழர்கள் சிறுபான்மைத் தமிழரின் உணர்வை அலட்சியம் செய்வதாகவோ புறக்கணிப்பதாகவோ அமைந்துவிடக் கூடாது. வேண்டுமென்றால் திருக்குறளின் முதல் அதிகாரத்தில் இருந்து ஒரு சில குறள்களை கடவுள் வணக்க முறைக்கு பயன்படுத்தலாம் என்றார்.

இதைப்போன்று தமிழர்களின் பரந்த நோக்கம் கொண்ட பண்பாடு, கலாச்சாரம், மொழிப்பற்று உள்ளிட்ட கூறுகளை வெளிப்பட்டுத்தும் நிகழ்ச்சிகள், தேசிய அளவிலும் பன்னாட்டு அளவிலும் முனைவர் மணிமாறன் தலைமையிலும் நடைபெறும் என்று எதிர்பார்ப்போம்.

கனடா உதயன் ஏடு மீண்டும் வாழ்த்துகிறது விரிவுரையாளர் மணிமாறனை!.

*நக்கீரன் - Nakkeeran 013-244 36 24*

## வீணாவின் கிறுக்கல்

அழகான வாழ்க்கையை
மறந்துவிட்டோம்,
அற்புதமான சிரிப்பை
இழந்துவிட்டோம்,
அமைதியை முழுமையாக
தொலைத்துவிட்டோம்,
அதனால் மன உளைச்சலுக்கு
ஆளானோம்,
இறுக்கம் கூடிய வாழ்க்கையால்
நாம் மனிதம் மறந்து போனோம்,
இருக்க இருக்க
வாழ்க்கை நரகமாகிப்போக,
கொலையும் தற்கொலையும்
உலகில் தாண்டவம் ஆட,
அடுத்தது என்ன என்பதை
அறியாமல் திகைத்துப்போனோம்,
நல்லருள் செய்து அனைவரையும்
காத்திடுவாய் இறைவா!



# சுகாதாரப் பணியாளர்களின் தனிமைப்படுத்தலில் இராணுவத்தின் தலையீடு?

இலங்கையில் கொரோனா நோய்த் தொற்றுக் கட்டுப்படுத்தல் பல சிக்கல்களையும் சவால்களையும் சந்தித்து வருகிறது. சுகாதார அமைச்சர் அதற்கான மருந்து தொடர்பாக முதலில் வெளியிட்ட கருத்தும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

அனைத்தும் இராணுவத்தின் கையில் எனும் நிலையில் நாடு சென்று கொண்டிருப்பதாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விமர்சனங்கள் எழுந்துவரும் நிலையில் தொற்றுக்கு ஆளான சுகாதாரப் பணியாளர்களின் தனிமைப்படுத்தல் தொடர்பில் புதிய சர்ச்சை ஒன்று எழுந்துள்ளது.

கொரோனா நோய் தடுப்பு தொடர்பிலான பெரும்பாலான முன்னெடுப்புகள் இராணுவத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் வைத்திய நிபுணர்கள், தாதிகள், இதர சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோரும் தனிமைப்படுத்தல் தொடர்பில் இராணுவத்தினரின் கெடுபிடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இலங்கையில் தொற்றுநோயைக் கையாளும் பணி இப்போது இராணு-வத் தளபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் சுகாதாரப் பணியாளர்களின் தனிமைப்படுத்தலும் இராணுவத்தால் அங்கீகரிப்பட வேண்டுமென்ற நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் சுகாதாரப் பணியாளர்களின் தனிமைப்படுத்தல் தொடர்பில் இராணுவத்தினர் தலையிடக் கூடாது என்று இலங்கையின் தாதிமார் தொழிற்சங்கம் கூறியுள்ளது.

நோய் தொற்று தொடர்பில் சந்தேகத்திற்கிடமான சுகாதார ஊழியர்களை இராணுவத்தால் நடத்தப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பக் கூடாதென்று தாதிமார் தொழிற்சங்கள் கோரியுள்ளது.



இராணுவத்தின் அப்படியான முன்னெடுப்பு சுகாதார சேவைக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்று தாதியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. தனிமைப்படுத்தப்பட்ட இதர நோயாளிகளுடன் தாதியர் மற்றும் சுகாதார ஊழியர்களை வைத்தியசாலையில் சேர்ப்பது அத்தியாவசியப் பணியாளர்களின் உடல் மற்றும் உள நலத்துக்கு தீங்கு ஏற்படுத்தும் என்கிறது அந்தச் சங்கம்.

"சுகாதாரப் பணியாளர்கள் வைத்திய முறைகளை அறிந்தவர்கள். அவர்கள் ஒரு வைத்தியராக, ஒரு தாதியராகச் செயல்படுகின்றனர். நோய் பற்றிய புரிதலும் அறிவும் அவர்களுக்குண்டு. எனவே அவர்களை ஏனைய நோயாளர்களைப் போல் நடத்த வேண்டிய அவசியமில்லை. தொற்றிலிருந்து விடுபடும் வழி-முறைகள் சுகாதாரப் பணியார்களுக்குத் தெரியும். அது மாத்திரம் இல்லாமல் ஒருவருக்கு நோய் தொற்று ஏற்படுவதைத் தவிர்க்கவும் அவர்களுக்குத் தெரியும்" என்று தாதிமார் தொழிற்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.



எனவே சுகாதாரப் பணியாளர்களுக்கு வேண்டிய வசதிகளை பெற்றுத்தர வேண்டியது அரசின் கடமை என்று அரச தாதியர் சங்கத்தின் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சமன் ரட்ணபிரிய அரசிடம் வேண்டியுள்ளார்.

சுகாதாரப் பணியார்கள் தமது வீடுகளில் தனிமைப்படுத்திக் கொள்வதில் பாதுகாப்புப் படையினர் தலையிட வேண்டாமென்று அவர் அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளார். அவர்களுக்கு நோய் தொற்றுப் பரவாமல் எப்படித் தடுப்பது என்பது தெரியும், எனவே இதில் இராணுவமோ, பொலிசாரோ தலையிட வேண்டாமென்று சமன் ரட்ணபிரிய கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆனால் இதற்கு பதிலளித்துள்ள இராணுவத் தரப்பு நோய் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை முதலில் அவர்களுக்கு நெருக்கமானவர்களின் வீடுகளில் தனிமைப்படுத்தப்படுவார்கள், அவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களில் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று இராணுவத் தளபதி கூறுகின்றார்.

"இனிவரும் காலங்களில் கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட நபரை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றாலும், அவர்கள் முதலில் நெருக்கமானவர்களின் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்படுவார்கள்".

எனவே சுகாதாரப் பணியாளர்களும் அதே வழியில் தனிமைப்படுத்தலில் ஈடுபடுவார்கள் என்று தாங்கள் நம்புவதாக இராணுவத் தளபதி கூறுகிறார். ஆனாலும் முன்னர் தனிமைப்படுத்தல் நடவடிக்கையின் போது இராணுவத்தினர் மக்களை பரவலாக நெருக்கடிக்குள் தள்ளினர் எனும் குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



*- மொன்றியல் வீணைமைந்தன் எழுதுகின்றார்*

# #19 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

"நடிப்பு" என்றால் என்ன என்று கேள்வி எழும்போது பலரும் பலவிதமான கருத்துக்களை சொன்னதையும் - எழுதியதையும் அறிந்திருக்கின்றோம். மேலும் இத்துறை சார்ந்த மேலைநாட்டுக் கலைஞர்களும் - படைப்பாளிகளும் தங்கள் அனுபவங்களைச் சொல்லிச் சென்ற கருத்துக்கள், அபிப்பிராயங்களையும் அறிந்திருப்பீர்கள். "நடிப்பு" என்றால் என்னவென்று எங்களது "நடிப்புச் சக்கரவர்த்தி" சிவாஜி ஐயா சொல்லிச் சென்றதை வாசகர்களுக்கு அறியத் தருகிறேன்.

"நடிக்கும் போது தன்னை மறந்து விடுபவன் நடிகனாகவே பிரகாசிக்க முடியாது! தன்னுடைய ஞாபகம் அவனுக்கு இருந்து கொண்டே இருக்க வேண்டும். சாமி ஆடுபவன் கூடத் தன்னை மறப்பதில்லை. சுற்றி இருப்பவர்களை ஒரு சுற்று பார்த்துக் கொண்டே தான் ஆடுகிறான். அப்படி ஒரு எல்லைக்குள் தன்னைப் பிறர் முழுமையாக நம்பும்படி மாற்றிக் காட்டுவது தான் நடிப்பு", என சொல்லிச் சென்றார் நமது நடிகர் திலகம். அது மாத்திரமல்ல, மேலும் சில அனுபவ ரீதியான விடயங்களையும் விபரிக்கிறார்.



"நான் ஏற்று நடித்த பல கதாபாத்திரங்களில் நான் சந்தித்துப் பழகிய பலரை உள்வாங்கி "இன்ஸ்பிரெட்" செய்துள்ளேன். இந்த யுத்தியை அவர் மட்டுமே பின்பற்றி நடித்தார் என்பது எனது பார்வையாகும். உதாரணமாக "ரங்கோன் ராதா" படத்தில் கொஞ்சம் வில்லத்தனமும், சுயநலமும் கலந்த குணச்சித்திரம். இளமையுடன் கதாநாயகனாக நடித்து பிரபலமடைந்து வரும் வேளையில் தன்னுடைய இமேஜ் உடைந்து போகுமே என அச்சம் கொள்ளாமல் கதாநாயகனாக அறிமுகமாகி 4 வருடத்திற்குள்ளாகவே 1956இல் "ரங்கோன் ராதா"வில் முதுமை கலந்த நாயகனாக நடிப்பதற்கு ஹாலிவுட் நடிகர் "சார்லஸ் போயரின்" இன்ஸ்பிரேஷனை பயன்படுத்திக்கொண்டார். தனது திறமையில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர் சிவாஜி. "கௌரவம்" படத்தில் டிவிஎஸ் குழுமத்தைச் சார்ந்த திரு கிருஷ்ணா அவர்களை அவரது ஸ்டைல், உடல் மொழியை உள்வாங்கினார். "வியட்னாம் வீடு" படத்தில் முழுக்க முழுக்க இந்தியா சிமெண்ட்ஸ் நாராயணசாமியின் நடை உடை பாவனைகளை பிரதிபலித்தார். "தங்கப்பதக்கம்" போலீஸ் அதிகாரியாக முன்னாள் காவல்துறை அதிகாரி திரு தேவாரத்தை உள்வாங்கியுள்ளார். காஞ்சிப் பெரியவாள் சங்கராச்சாரிய சுவாமிகள் மனதில் இருத்திக் கொண்டு "திருவருட்செல்வர்" அப்பர் சுவாமிகளானார். இத்தகைய ஆற்றல், உழைப்பு சிவாஜி ஐயா அவர்களுக்கு கைவந்த கலையாகும். சில இயக்குனர்கள் சிவாஜி ஐயாவை பாத்திரத்தன்மைக்கேற்றார் போல் தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளாமல் நடிக்க வைக்கிறார்கள். ஆனால் அனுபவம் மிக்க இயக்குனர்கள் சிலர் சிவாஜி ஐயாவை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து வெற்றி கண்டுள்ளார்கள். உதாரணமாக "இருவர் உள்ளம்" படத்தில் ஒரு காட்சியில் இயக்குனர் எல். வி பிரசாத் சிவாஜியிடம் "நீங்கள் இக்காட்சியில் கொஞ்சம் அடக்கி வாசியுங்கள். அப்போது தான் காட்சி எடுபடும்" எனச்சொல்லியதும் கதாநாயகனான சிவாஜி விட்டுக் கொடுத்தார்.



"ஒரு நடிகனுக்கு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வேண்டும். காட்சி தான் முக்கியமே தவிர தனி மனிதனின் திறமையல்ல", என்பதே சிவாஜி அவர்களின் கருத்தாகும். "தேவர் மகன்" "முதல் மரியாதை" ஆகிய படங்களின் இயக்குனர்கள் சிவாஜி ஐயாவை தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்து பயன்படுத்தியிருப்பதை ரசிகர்கள் அவதானிக்கலாம்.

சரி! இன்னொரு சமாச்சாரத்தையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அது என்னவெனில் திரையில் சிவாஜி ஐயாவின் முகம் கேமராவிற்கு முன் அழகாக எடுபடுமா? என "பராசக்தி" காலத்தில் ஒரு சந்தேகம் எழுந்தது.

சிவாஜி ஐயாவின் காதுபடவே சிலர் கிசுகிசுத்தனர். "இவன் என்னடா வசனம் பேசும்போது மீன் மாதிரி வாயை பொளக்கிறான், குதிரை மாதிரி மூஞ்சியை வைச்சுகுணு நடிக்க வந்துவிட்டான்" என பேசியதைக் கேட்டு சிவாஜி ஐயா கண் கலங்கிய நாட்களுமுண்டு.

பின்னாளில் சாமுந்திரிகா லட்சணம் கொண்ட அழகிய தமிழ் மகன் என கொண்டாடப்பட்டதுமுண்டு. "அழகன் என்பவன் யார்?" என விளக்கம் தரும் நடிகர், ஓவியக் கலைஞர் சிவக்குமார் சொல்லிய கூற்றினை ஒப்பு நோக்குவோம்.

"அழகான ஆண், அழகான பெண் என்று நாம் முடிவு எடுக்கும் பெரும்பாலானவர்களை உற்றுநோக்கினால் பொதுவான இலக்கணத்திற்குள் அவர்கள் வருவார்கள். அழகான கண்கள் நீரோட்டமுள்ள பெரிய கண்களுக்கு இடையேயுள்ள இடைவெளி ஒரு கண் அளவே இருக்கவேண்டும். கூர்மையான எடுப்பான மூக்கு அமைந்திருக்க வேண்டும். நேராக நிற்கும் போது நாசித்துவாரம் தெரியாமல் மூக்கின் நுனி சற்று கவிழ்ந்து இருக்க வேண்டும். புருவத்தில் இருந்து மூக்கின் நீளம் எந்த அளவிற்கு இருக்கிறதோ, அதே அளவு புருவத்தின் மேல் நெற்றியின் அளவும் மூக்கின் கீழ் தாடை வரை உள்ள அளவும் இருக்க வேண்டும். வலதுபக்கமாக மென்று சாப்பிடும் பழக்கம் உள்ளவர்களுக்கு வலது தாடை பெரிதாக இருக்க வேண்டும். இடது பக்கம் பயன்படுத்துவோருக்கு இடது தாடை பெரிதாக இருக்கும். உதடுகள் சிறிதாக இருக்க வேண்டும். தலைக்கும் மார்புக்கும் இடையேயுள்ள கழுத்துப் பகுதியின் நீளம் கூட விழாத கழுத்துச் சதை முக்கியம். ராமர், லட்சுமணர் ஓவியங்களில் இருப்பது போல அளவான மார்பும், திரண்ட புஜங்களும் குறுகிய வயிறும் இருக்கவேண்டும். கை விரல்கள் ஓவியர் எஸ் ராஜம் படைப்புகளில் உள்ளது போல கூராக இருந்திட வேண்டும். ஒட்டுமொத்தமாக 75% ஆண்மையும் 25% பெண்மையும் கலந்து இருக்கின்ற ஆண்மகனே அதிக மக்களை கவருவான் என்பது இலக்கணம். விதிவிலக்கை விட்டு விடலாம். சிவாஜிக்கு இவ்விலக்கணம் உண்டு. மேலே சிவக்குமார் அவர்கள் சொன்ன மிகப்பெரிய தகுதிகளை பெரும்பாலும் சிவாஜி அவர்களின் ஆரம்ப படங்களில் நாம் காணமுடியும். உதாரணத்திற்கு சில படங்கள் "அந்த நாள்" "திரும்பிப்பார்" "ராஜா ராணி" "அமர தீபம்" "அம்பிகாபதி" "உத்தமபுத்திரன்" "கோடீஸ்வரன்" "அன்னையின் ஆணை" 52 லிருந்து 1960 வரையிலான படங்களை அவதானித்தால் தெரியவரும்.

சிவாஜி ஐயாவின் மிகப்பெரிய சொத்து, அவருடைய வீரியமும் உயிர்ப்புமுள்ள விழிகள் ஆகும். அந்தக் கண்களை வைத்து தான் பரிவை, பாசத்தை, பயத்தை, கோபத்தை, அழுகையை, ஆச்சரியத்தை, அப்பாவித்தனத்தை, ஏக்கத்தை, ஏமாற்றத்தை, வீரத்தை, விவேகத்தை அவர் அதிகமாக வெளிப்படுத்தினார்.

இன்றும் என் நெஞ்சத் திரையில் பசுமையாக ஒரு காட்சி. "பாசமலர்" படத்தில் மலர்களைப் போல் தங்கை உறங்குகிறாள், என்ற பாடல் வரிகள் துவங்கமுன் பால் தம்ளர் கையில் ஏந்தி வந்தவர் கண்ணுறங்கும் தங்கை சாவித்திரியைப் பார்த்து... வட்ட கருவிழியில் லேசாக நீர் தேக்கி "அம்மாடி! தூங்கி விட்டாயா" என பாசத்தை வெளிப்படுத்தும் ஜீவனுள்ள காட்சி!

"அன்னையின் ஆணை" இல் இடம்பெற்ற ஓரங்க நாடகமான "சாம்ராட் அசோகன்" நாடகத்தில் மனதளவில் திருந்திய அசோக மன்னன் உணர்வுகளை, பொங்கியெழும் கோப விழிகள், தூக்கிய புருவங்கள், படிப்படியாக மாறி லேசாக நீர் கோர்த்து மெல்ல மெல்ல சாந்த நிலை அடைவதை அற்புதமாக வெளிப்படுத்தியிருப்பார்.

"உடல் ஊனமுற்ற நாயகன் கண்ணையனின் உள்ளம் தான் நான் விரும்புவது என நாயகி "பொன்னி" சரோஜாதேவி சொல்ல பக்கவாதம் வந்த கையை ஒரு முறை பார்த்துவிட்டு (படம்: பாகப்பிரிவினை) "இந்தப் பரிதாபத்திற்குரியவன் மேல் ஆசை படுகிறாய்" என்று பரிதாபம், அடிமனதில் ஆனந்தம், அவளுக்கு நன்றி கூறுதல் அனைத்தையும் சில நொடி கண்ணசைவில் காட்டுவார்.

"பாவமன்னிப்பு" படத்தில் எம்.வி ராஜம்மா தான் தன்னைப் பெற்ற அன்னை என அறியாத சிவாஜி, ஓரிடத்தில் நன்றி பெருக்கால் "அம்மா.. அம்மா.. அம்மா.." என்று பாசத்தை நன்றியை கண்களில் தேக்கிஅழுதுகொண்டே சிரிப்பார். "சிலர் சிரிப்பார்.. சிலர் அழுவார்.." என்ற பாடல் காட்சியில் சிரிப்பதும், அழுவதும் சிரிப்புடனே அழுகையைக் கொண்டுவந்து நிரப்புவதுமாக பின்னி எடுப்பார். இக்காட்சியை க்ளோசப்பில் காட்டுவதைப் பார்த்து பிரமித்தவன் நான்!

புத்த பகவானின் சாந்தத்தையும் அந்த கண்கள் வெளிப்படுத்தும். போதையுடன் தள்ளாடும் குடிகாரனாக காமவேட்கையை காட்டும் கண்களை "நவராத்திரி"யிலும் பார்த்தோம். அப்படி ஒரு ஆற்றல் மிக்க விழிகளை உடையவர் நமது சிவாஜியை ஐயா. அழகான சிறிய உதடுகள் அவருக்கு. சிரித்தால் கன்னக் கதுப்புகளில் எலுமிச்சம் பழம் போன்ற சிரிப்புக்கு அழகூட்டும். இடதுபக்க சிங்கப்பல் கவர்ச்சியைக் கூட்டும்.

அடுத்து வரும் தொடர்களில் இடையிடையே அவர் நடித்த படங்களிலிருந்து நுணுக்கமான காட்சிகளை நினைவூட்டுவேன். பலருக்கு தெரியாத இன்னுமொரு தகவலை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அதாவது, நமது சிவாஜி ஐயா நடித்த படங்களிலிருந்து... அவரது கைவிரல்கள் காட்டிய நடன முத்திரைகளைக் காட்சிப்படுத்தி பிரபல நடன நாட்டிய மேதை பத்மஸ்ரீ செல்வி பத்மா சுப்பிரமணியம் அவர்கள் தனியாக ஒரு நூலே (சிவாஜியின் விரல்களில் சாஸ்திரிய நடன முத்திரைகள்) எழுதி எங்களை ஆச்சரியப்படுத்தியுள்ளார். தேடல் செய்து வாங்கிப் பாருங்கள் படியுங்கள்.



# சென்னையில் கொட்டித் தீர்த்த மிக கன மழை: சாலையில் பெருக்கெடுத்த வெள்ளத்தால் வாகன ஓட்டிகள் அவதி



தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கிய நிலையில் சென்னையில் நேற்று விடிய விடிய மிக கனமழை கொட்டித் தீர்த்தது. இதன் காரணமாக சாலைகளில் வெள்ளநீர் பெருக்கெடுத்து ஓடியது.வீடுகளில் மழை நீர் புகுந்ததால்மக்கள் அவதிக்குள்ளாயினர்.சென்னையில் நேற்றுமுன்தினம் நள்ளிரவில் இருந்து விடிய,விடிய பரவலாக கனமழை பெய்தது. சென்னையை ஒட்டியுள்ள செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களிலும் கனமழை பெய்தது

நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சென்னை டிஜிபி அலுவலகத்தில் 18செமீ, அண்ணாபல்கலைக்கழகத்தில் 14 செமீ, நுங்கம்பாக்கம், புழல் ஆகிய பகுதிகளில் தலா 13 செமீ, சென்னைமாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்10 செமீ, அம்பத்தூரில் 9 செமீ, ஆலந்தூர், சோழிங்கநல்லூர் ஆகியஇடங்களில் தலா 8 செமீ, தண்டையார்பேட்டையில் 7 செமீ, பெரம்பூரில் 6 செமீ, அயனாவரம், எம்ஜிஆர் நகர் ஆகிய இடங்களில் தலா 5 செமீ மழை பதிவாகி இருந்தது. சென்னையில் பெய்த மிக கனமழை காரணமாக அண்ணா சாலை, காமராஜர் சாலை, பூந்தமல்லி நெடுஞ்சாலை உள்ளிட்ட பல்வேறு சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.

அதனால் காலை நேரத்தில் வாகன ஓட்டிகள் கடும் அவதிக்குள்ளாயினர். சாலைகளில் மழைநீர் தேங்கியதால், பல இடங்களில் பால் விநியோகம் தாமதமானது.பல சுரங்கப் பாலங்களில் மழைநீர் தேங்கியது. மாநகராட்சி மற்றும்நெடுஞ் சாலைத் துறை அதிகாரிகள் உடனுக்குடன் சுரங்கப் பாலங்களில் இருந்து மழைநீரை வெளியேற்றினர். திருவல்லிக்கேணி, தண்டையார்பேட்டை, பட்டாளம், மயிலாப்பூர், கொடுங்கையூர், வியாசர்பாடி, வேப்பேரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உட்புறச் சாலைகளில் மழைநீர் தேங்கியது. இப்பகுதிகளில் பல வீடுகளில்மழைநீர் புகுந்தது. அதனால் அந்தவீடுகளில் வசித்த பொதுமக்கள்அவதிக்குள்ளாயினர்.

மழைநீர்தேங்கிய பகுதிகளில் அசம்பாவிதங்கள் ஏற்படுவதை தவிர்க்க மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது.மிக கனமழை காரணமாக சில இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்தன. சில இடங்களில் மரக்கிளைகள் முறிந்து விழுந்தன.பல இடங்களில் தெருவோரம் தேங்கிக் கிடந்த குப்பைகளுடன் மழை நீர் தேங்கியதால் அப்பகுதிகளில் துர்நாற்றம் வீசியது. மேடவாக்கம் வேளச்சேரி சாலையில் ஏற்கெனவே மேம்பாலப் பணிகள் நடைபெற்று வந்தநிலையில், சாலையில் மழைநீரும் தேங்கியதால்,கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

சென்னை மக்கள் வடகிழக்கு பருவமழை பாதிப்புகள் குறித்த புகார்களை தெரிவிக்க 044 2538 4530, 044 2538 4540 ஆகிய அவசர எண்களை மாநகராட்சி வெளியிட்டுள்ளது. மேலும் 1913 என்ற மாநகராட்சி புகார் எண்ணையும் தொடர்புகொண்டு தெரிவிக்கலாம் என்று மாநகராட்சி அறிவித்துள்ளது.

# தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டதில் மகிழ்ச்சி என்பதா? இலங்கை அமைச்சருக்கு ராமேசுவரம் மீனவர்கள் கடும் கண்டனம்

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியதில் சந்தோஷம் அடைவதாக அந்நாட்டு மீன்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளதற்கு ராமேசுவரம் மீனவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். கடந்த திங்கட்கிழமை ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து பூண்டி ராஜன் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் ஆறு பேர் மீன்பிடிக்கச் சென்றனர்.

மீனவர்கள் தலைமன்னார் அருகே வலையை விரித்து மீன்பிடித்துக் கொண்டிருந்த போது ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் கற்கள் மற்றும் பாட்டில்கள் கொண்டு நடத்திய தாக்குதலில் படகிலிருந்த சுரேஷ் (38) என்பவர் காயமடைந்தார்.இந்நிலையி, தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை கற்கள் மற்றும் பாட்டில்களைக்




கொண்டு தாக்குதல் நடத்திக் காயப்படுத்திய சம்பவம் சந்தோஷம் அளிப்பதாக இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார். மேலும் இது தொடர்பாக இலங்கை கடற்படை அதிகாரிகளை தொடர்பு கொண்டு தனது பாராட்டைத் தெரிவித்ததாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

இது குறித்து ராமேசுவரம் விசைப்படகு மீனவர்கள் சார்பாக கருத்து தெரிவித்த மீனவப் பிரதி நிதி சேசு பொ்னாண்டோ, ''தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் மகிழ்ச்சி அளிப்பதாக இலங்கை தமிழ் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா கூறியிருப்பது மிகுந்த வேதனை அளிப்பதாக உள்ளது. அமைச்சரின் கருத்துக்கு கடும் கண்டனத்தை பதிவு செய்து கொள்ள விரும்புகிறோம்.தமிழக மீனவர்கள் எல்லை தாண்டுவதாக சொல்கிறார்கள்.

மத்திய அரசு கச்சத்தீவை மீண்டும் மீட்டுத் தந்தால் எல்லை தாண்ட மாட்டோம் என்று உறுதி கூறுகிறோம்.மீனவர் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும். அல்லது கச்சத்தீவை மீட்பதே மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக அமையும்'' என்றார்.

# அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% இட ஒதுக்கீடு அரசாணை; சட்டப் பாதுகாப்பு வேண்டும்: ராமதாஸ்



7.5% இட ஒதுக்கீட்டைப் பாதுகாக்க போதிய சட்டப்பாதுகாப்பு ஏற்பாடுகளை தமிழக அரசு செய்ய வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.இது தொடர்பாக இன்று அவர் வெளியிட்ட அறிக்கை:''தமிழ்நாட்டில் அரசு மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையில், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% இட ஒதுக்கீடு வழங்குவதற்கான அரசாணையை அரசு வெளியிட்டிருக்கிறது.

இந்த அரசாணை மாணவர்கள் மத்தியில் நிலவும் பதற்றத்தைப் போக்க வேண்டுமே தவிர, மேலும் குழப்பங்களை ஏற்படுத்திவிடக் கூடாது.அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும், தனியார் பள்ளிகளில் கல்வி பெறும் உரிமைச் சட்டத்தின்படி பயிலும் மாணவர்களுக்கும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் 7.5% இட ஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டம் தமிழக சட்டப்பேரவையில் கடந்த செப்டம்பர் 15 ஆம் தேதி கொண்டு வரப்பட்டு, அதே நாளில் நிறைவேற்றப்பட்டது. அந்த சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க ஆளுநர் கால தாமதம் செய்த நிலையில், ஆளுநர் உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று தொடக்கம் முதலே பாமக வலியுறுத்தி வருகிறது.

ஆனால், சட்டம் இயற்றப்பட்டு 45 நாட்களாகியும் ஆளுநர் ஒப்புதல் அளிக்காத நிலையில், அரசு இப்போது தன்னிச்சையாக அரசாணை பிறப்பித்துள்ளது.அரசு மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்; ஆனால், ஆளுநர் தேவையின்றிக் காலதாமதம் செய்து வருவதால் நடப்பாண்டில் இந்த இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் பயனற்றுப் போய்விடக்கூடும்; இத்தகைய சூழலில் மாணவர்களுக்கு ஏதேனும் ஒன்றைச் செய்தாக வேண்டும் என்ற எண்ணத்தில் அரசு இவ்வாறு செய்திருப்பதாக அறிய முடிகிறது.

அரசியலமைப்புச் சட்டத்தின் 162 ஆவது பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, கொள்கை முடிவு எடுத்து இந்த அரசாணையைப் பிறப்பித்திருப்பதாக அரசு விளக்கமளித்துள்ளது. சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டம் ஆளுநரின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கும் நிலையில், இப்படி ஓர் அரசாணையை பிறப்பித்திருப்பது நீதிமன்றத்தின் ஆய்வில் தாக்குப்பிடிக்குமா? என்பது தெரியவில்லை.

மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கைக்குக் கடைசி நாள் இன்று வரை நிர்ணயிக்கப்படவில்லை. ஒரு வேளை கடைசி நாள் நிர்ணயிக்கப்பட்டாலும் கூட, உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, நிலைமையை விளக்கிக் கூறி கூடுதல் அவகாசத்தைப் பெற முடியும். அதற்கான முன்னுதாரணங்கள் உள்ளன. எனவே, ஆளுநருக்கு அழுத்தம் கொடுத்து, அரசின் சட்டத்திற்கு ஒப்புதல் பெற்று 7.5% இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவதுதான் சரியாக இருக்கும். இந்த விஷயத்தில் அவசரப்பட்டு மருத்துவ மாணவர் சேர்க்கை அறிவிக்கையை வெளியிடக்கூடாது.

இந்த அரசாணையை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டால், அதை, தலைசிறந்த உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்களை நியமித்து வலிமையாக எதிர்கொண்டு 7.5% இட ஒதுக்கீட்டைப் பாதுகாக்க போதிய சட்டப்பாதுகாப்பு ஏற்பாடுகளை தமிழக அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.7.5% இட ஒதுக்கீடு தொடர்பான அனைத்துக் குழப்பங்களுக்கும் காரணம் தமிழக ஆளுநர்தான்.

சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கு 45 நாட்களுக்கு மேலாகியும் ஒப்புதல் அளிக்காமல் இருப்பதற்கு ஆளுநர் தரப்பில் கூறப்படும் காரணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளத் தக்கவையாக இல்லை. இனியும் இந்தச் சிக்கலைத் தீவிரப்படுத்தாமல் இட ஒதுக்கீட்டுச் சட்டத்துக்கு ஆளுநர் உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டும்.

அதுமட்டுமின்றி, இனி வரும் காலங்களில் அரசின் முடிவுகள், தீர்மானங்கள், சட்டங்கள் ஆகியவற்றுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க காலவரையறை நிர்ணயிக்கும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்''. இவ்வாறு ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

# "எல்லைகளைத் தாண்டிய உலகத் தமிழ் படைப்பிலக்கியம் என்ற பொதுமைப்பாட்டை நிறுவிய பெருமை அ. முத்துலிங்கம் அவர்களையே சாரும்"

**- யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கலாநிதி சு. குணசேகரன் புகழாரம்**




தான்பணிக்காகவும்பயணத்திற்காகவும் சென்றுவந்த நாடுகளிலெல்லாம் அந்தந்த நாட்டுப் பின்னணியைக் கொண்ட படைப்புக்களை உலகெங்கும் பரந்து வாழுகின்ற தனது வாசகர்களுக்குத் தந்து, எல்லைகளைத் தாண்டிய உலகத் தமிழ் படைப்பிலக்கியம் என்ற பொதுமைப்பாட்டை நிறுவிய பெருமை அ. முத்துலிங்கம் அவர்களையே சாரும். மேலும் எமது தமிழ் நிலத்தில் நாம் நேரில் சந்தித்த மொழிசார்ந்த, சூழல் சார்ந்த, காதல் தொடர்பான, பண்பாடு சார்ந்த காட்சிகளுக்கு அப்பால் தான் வாழ்ந்த நாடுகளில் காணப்படும் இவ்வாறான தனது அனுபவங்களை அழகிய இலக்கியப் படைப்புக்களாக எமக்குத் தந்து, நாம் காணக்கிடைக்காத காட்சிகளை எம் கண்களுக்கு முன்பாக கொண்டுவந்தவரும் இந்த அற்புதமான எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்கள்: இவ்வாறு "படைப்புலகில் அ. முத்துலிங்கம்" என்ற தலைப்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இணையவழி இலக்கியக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துவாரகன் என்னும் புனைபெயர் கொண்ட கலாநிதி சு. குணசேகரன் புகழாரம் சூட்டினார்.

கனடாவைத் தளமாகக் கொண்ட தமிழ் ஆதர்ஸ்.கொம் மற்றும் தமிழ்நாட்டை தளமாகக் கொண்ட இலக்கிய வெளி ஆகிய இரண்டு இலக்கிய அமைப்புக்கள் ஏற்பாடு செய்த இந்த இணையவழி கலந்துரையாடலில், "அ. முத்துலிங்கத்தின் சிறுகதைகளில் உலக அனுபவம்" என்ற தலைப்பில் இலங்கையிலிருந்து துவாரகன் என்னும் புனைபெயர் கொண்ட கலாநிதி சு. குணசேகரன் அவர்கள், "அ. முத்துலிங்கத்தின் சிறுகதைகளில் மனித நேயம்" தலைப்பில் இந்தியாவிலிருந்து முனைவர் ப. சரவணன் அவர்கள், "அக்கறையெனில் முத்துலிங்கம்" என்ற தலைப்பில் அமெரிக்கா வாழ் தமிழ்நாட்டவரான வ. சௌந்தரராஜான் அவர்கள், அ. முத்துலிங்கத்தின் சிறுகதைகளில் அங்கதம்" என்ற தலைப்பில் தமிழ்நாட்டிலிருந்து கவிஞர், திரைப்பட இயக்குனர் சாம்ராஜ் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.




இணையவழிக் கருத்தரங்கை முதலில் தமிழ் ஆதர்ஸ்.கொம் சார்பில் திருமதி. தர்சி அகிலேஸ்வரன் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து, தனது கருத்துக்களைச் சொல்லிய பின்னர் வெவ்வேறு தலைப்புக்களில் உரையாற்ற அழைக்கப்பட்.டவர்களை ஒவ்வொருவராக அறிமுகம் செய்து அழைத்தார். அந்த வகையில் முதலில் உரையாற்றிய கலாநிதி சு. குணசேகரன் அவர்கள் தொடர்ந்து கருத்துக்களைப் பகிர்கையில் பின்வருமாறு கூறினார்.

தற்போது கனடாவில் வாழ்ந்து வரும் அ. முத்துலிங்கம் அவர்களுடைய படைப்புக்களை உலகெங்கும் வாசகர்கள் தேடிப் படிக்கின்ற காட்சிகளை நான் கண்டுள்ளேன். எனக்கு கூட அவரது படைப்புக்கள் பல கிடைக்கவில்லை என்ற ஏக்கம் இன்றும் உள்ளது. அவரது படைப்புக்கள் உலகத் தமிழ் இலக்கியம் என்ற வகைக்கு அடங்குகின்ற முக்கிய மான பொக்கிசங்கள் என்றே நான் கருதுகின்றேன்.

அவரது எழுத்தாற்றல் வித்தியாசமானது எந்த உணர்வோடு அவர் எழுதுகின்றாரோ, அதே உணர்வை வாசிக்கும் வாசகர்களும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்கள் கையாளும் "மொழி நடை உதவுகின்றது. இந்த உணர்வுகள் எம்மிடத்திலேயே நிரந்தரமாகத் தந்துவிடக்கூடியதாகவே அவரது எழுத்தோவியங்கள் அமைகின்றன. மேலும் இயல்பாக தனது கதையையும் கதாபாத்திரங்களையும் நகர்த்திச் செல்லுகின்ற அவரது ஆளுமை என்பது போற்றப்பட வேண்டிய தொன்று" என்று கூறி அ. முத்துலிங்கம் எழுதிய சில சிறுகதைகளிலிருந்து சில பாத்திரங்களையும் உரையாடல்களையும் எடுத்துச் சொல்லி உரையை நிறைவு செய்தார் அவர்.



அடுத்து முனைவர் ப. சரவணன் தனது உரையை நிகழ்த்தினார் அடுத்து, "அ. முத்துலிங்கத்தின் சிறுகதைகளில் மனித நேயம்" தலைப்பில் முனைவர் ப. சரவணன் அவர்கள் உரையாற்றும் போது" நான் வாசித்த இலக்கியப் படைப்புக்களில் அ. முத்துலிங்கம் அவர்களுடைய கதைகளிலே நிறையவே மனிநேயம் பண்பாடு போன்ற விடயங்கள் வெளிப்படையாகச் சொல்லப்படுகின்றன. அதனால் ஈர்க்கப்பட்ட நான் அவரது படைப்புக்களை எனது முனைவர் பட்டத்திற்கான ஆய்வாக எடுத்து அதில் வெற்றிகண்டு இன்று உங்கள் முன்னால் பேசிக்கொண்டிருக்கின்றேன். எனவே அவரது படைப்புக்களை நாம் அதிகம் தேடிப் பார்த்து வாசித்து மனிதநேயம் தொடர்பான உன்னதமமான விடயங்களை அறிந்து கொள்வோம்" என்றார்.

அடுத்து, "அக்கறையெனில் முத்துலிங்கம்" என்ற தலைப்பில் அமெரிக்கா வாழ் வ. சௌந்தரராஜான் அவர்கள்,. உரையாற்றும் போது, "தற்போதை தமிழ் படைப்பிலக்கிய பரப்பில் தமிழ்நாட்டவர்களும் ஈழத்து வாசகர்களும் மிகுந்த ஆர்வத்துடன் வாசிப்பது அ.முத்துலிங்கம் அவர்களுடைய படைப்புக்களைத் தான் என்றே நான் அறிகின்றேன். அதற்குரிய காரணம் அவரது படைப்புக்களில் மாந்தர்களை எவ்வாறு உயர்வாக காட்டுகின்றாரோ, அதே போன்றே விலங்குகள் பறவைகள் போன்ற ஐந்தறிவு படைத்தவற்றையும் பாத்திரங்களாவே அன்றி காட்சிப்படுத்தியோ கதைகளோடு இணைத்துச் சென்று அவ்வாறான யுக்தியை கையாள்வதில் வெற்றி கண்டவர் அ.முத்துலிங்கம்" என்றார்.

அடுத்து "அ. முத்துலிங்கத்தின் சிறுகதைகளில் அங்கதம்" என்ற தலைப்பில் கவிஞர், திரைப்பட இயக்குனர் சாம்ராஜ் உரையாற்றும் போது, பின்வருமாறு கூறினார் "அ.முத்துலிங்கத்தின் கதைகளில் அங்கதம் என்பது இரண்டு வகையான பகிரப்படுவதுண்டு. சில கதைகளில் முழுமையாகவே நகைச்சுவையோட்டம் காணப்படும். சில கதைகளில் கதையின் முக்கியமான பாத்திரங்களின் நகர்வுகளோடு நகைச்சுவை அல்லது அங்கதம் காணப்படும். அவ்வாறாக பலவகையான உணர்வுகளை எமக்கு காட்டி அவற்றை நாமே அனுபவிக்கும் வகையில் உதவுகின்ற ஒரு படைப்பாளியாகவே நான் அவரைப் பார்க்கின்றேன். அத்துடன் அவர் தனது படைப்புகளின் மூலம் அவர் பார்க்கின்ற உலகப் பரப்பு மிகவும் விசாலமானது. நாம் பார்க்கின்ற எல்லைகளைத் தாண்டி அவர் உலகப்பரப்பில் எம்மை வலம் வரச்செய்யும் ஒரு அற்புதமான படைப்பாளி என்பதை நான் எனது வாசிப்பின் மூலம் அறிந்து கொண்டுள்ளேன்" என்றார்.

தொடர்ந்து கனடாவில் வாழும் ஆசிரியர் த. சிவபாலு அவர்கள் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள விரும்பிய பலரது உரைகளை இணைத்து வழி நடத்தினார். மேற்படி இணையத்தள கருத்தரங்கில் எழுத்தாளர் அ.முத்துலிங்கம் அவர்களும் நேரடியாகக் கலந்து கொண்டார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

---

# அன்பின் தொனி - 584

**பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)**

**ஜெபத்தின் வல்லமை.**

**தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்தேன்**

தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னை சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என்பாவமற என்னை சுத்திகரியும். என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன், என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன், நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன். இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன், என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள். இதோ, உள்ளத்தில் உண் மையிருக்க விரும்புகிறீர், அந்தக்கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர். நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன், என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன். நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும், அப்பொழுது நீர் நொறுக்கின எலும்புகள் களிகூரும். என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும். தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப் பியும். உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளா மலும் இரும். உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும். அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன், பாவிகள் உம்மிடத்தில் மனந்தி ரும்புவார்கள். தேவனே, என்னை இரட்சிக்குந் தேவனே, இரத்தப்பழிகளுக்கு என்னை நீங்கலாக்கிவிடும், அப்பொழுது என் நாவு உம்முடைய நீதியைக் கெம்பீரமாய்ப்பாடும். ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும், அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும். பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன், தகனபலி யும் உமக்குப் பிரியமானதல்ல. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான், தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர். சீயோனுக்கு உமது பிரியத்தின்படி நன்மை செய்யும், எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக. அப்பொழுது தகனபலியும் சர்வாங்க தகனபலியுமாகிய நீதியின் பலிகளில் பிரியப்படுவீர், அப்பொழுது உமது பீடத்தின்மேல் காளைகளைப் பலியிடுவார்கள். **- சங்கீதம் 51: 1-19**

**நானோ தேவனை நோக்கிக் கூப்பிடுவேன்,**

தேவனே, என் ஜெபத்தைக் கேட்டருளும், என் விண்ணப்பத்திற்கு மறைந்திராதேயும். எனக்குச் செவிகொடுத்து, உத்த ரவு அருளிச்செய்யும், சத்துருவினுடைய கூக்குரலினிமித்தமும், துன்மார்க்கர் செய்யும் இடுக்கத்தினிமித்தமும் என் தியானத்தில் முறையிடுகிறேன். அவர்கள் என்மேல் பழிசாட்டி, குரோதங்கொண்டு, என்னைப் பகைக்கிறார்கள். என் இருதயம் எனக்குள் வியாகுலப்படுகிறது, மரணத்திகில் என்மேல் விழுந்தது. பயமும் நடுக்கமும் என்னைப் பிடித்தது, அருக்களிப்பு என்னை மூடிற்று. அப்பொழுது நான்: ஆ, எனக்குப் புறாவைப்போல் சிறகுகள் இருந்தால், நான் பறந்து போய் இளைப்பாறுவேன் நான் தூரத்தில் அலைந்து திரிந்து வனாந்தரத்தில் தங்கியிருப்பேன். பெருங்காற்றுக்கும் புசலுக்கும் தப்பத் தீவிரித்துக்கொள்ளுவேன் என்றேன். ஆண்டவரே, அவர்களை அழித்து, அவர்கள் பாஷையை பிரிந்து போகப்பண்ணும், கொடுமையையும் சண்டையையும் நகரத்திலே கண்டேன், அவைகள் இரவும் பகலும் அதின் மதில்க ள்மேல் சுற்றித்திரிகிறது, அக்கிரமமும் வாதையும் அதின் நடுவில் இருக்கிறது, கேடுபாடுகள் அதின் நடுவில் இருக்கிறது: கொடுமையும் கபடும் அதின் வீதியை விட்டு விலகிப்போகிறதில்லை. என்னை நிந்தித்தவன் சத்துரு அல்ல, அப்படியி ருந்தால் சகிப்பேன், எனக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டினவன் என் பகைஞன் அல்ல, அப்படியிருந்தால் அவனுக்கு மறைந்திருப்பேன். எனக்குச் சமமான மனுஷனும், என் வழிகாட்டியும், என் தோழனுமாகிய நீயே அவன். நாம் ஒருமித்து, இன்பமான ஆலோசனைபண்ணி, கூட்டத்தோடே தேவாலயத்துக்குப் போனோம். மரணம் அவர்களை தொடர்ந்து பிடிப்பதாக, அவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்குவார்களாக, அவர்கள் வாசஸ்தலங்களிலும் அவர்கள் உள்ளத்திலும் பொல்லாங்கு இருக்கிறது. நானோ தேவனை நோக்கிக் கூப்பிடுவேன், கர்த்தர் என்னை இரட்சிப்பார். அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்பண்ணி முறையிடுவேன், அவர் என் சத்தத்தைக் கேட்பார். திரளான கூட்டமாய்க் கூடி என்னோடு எதிர்த்தார்கள், அவரோ எனக்கு நேரிட்ட போரை நீக்கி, என் ஆத்துமாவைச் சமாதானத்துடன் மீட்டுவிட்டார். ஆதிமுதலாய் வீற்றிருக்கிற தேவன் கேட்டு, அவர்களுக்குப் பதிலளிப்பார், அவர்களுக்கு மாறுதல்கள் நேரிடாததினால், அவர்கள் தேவனுக்குப் பயப்படாமற்போகிறார்கள். அவன் தன்னோடே சமாதான மாயிருந்தவர்களுக்கு விரோதமாய் தன் கையை நீட்டி, தன் உடன்படிக்கையை மீறி நடந்தான். அவன் வாயின் சொற்கள் வெண்ணெயைப்போல மெதுவானவைகள், அவன் இருதயமோ யுத்தம், அவன் வார்த்தைகள் எண்ணெயிலும் மிரு துவானவைகள், ஆனாலும் அவைகள் உருவின பட்டயங்கள். கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன் னை ஆதரிப்பார், நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார். தேவனே, நீர் அவர்களை அழிவின் குழியில் இறங்கப் பண்ணுவீர் இரத்தப்பிரியரும் சூதுள்ள மனுஷரும் தங்கள் ஆயுளின் நாட்களில் பாதிவரையிலாகிலும் பிழைத்திருக்க மாட்டார்கள், நானோ உம்மை நம்பியிருக்கிறேன். **- சங்கீதம் 55: 1-23**

**இதோ, தேவன் எனக்குச் சகாயர்**

தேவனே, உமது நாமத்தினிமித்தம் என்னை இரட்சித்து, உமது வல்லமையினால் எனக்கு நியாயஞ்செய்யும். தேவனே, என் விண்ணப்பத்தைக்கேட்டு, என் வாயின் வார்த்தைகளுக்குச் செவிகொடும். அந்நியர் எனக்கு விரோதமாய் எழும்பு கிறார்கள், கொடியர் என் பிராணனை வாங்க தேடுகிறார்கள், தேவனைத் தங்களுக்கு முன்பாக நிறுத்தி நோக்கார்கள் இதோ, தேவன் எனக்குச் சகாயர், ஆண்டவர் என் ஆத்துமாவை ஆதரிக்கிறவர்களோடே இருக்கிறார். அவர் என் சத்துருக்களுக்குத் தீமைக்குத் தீமையை சரிக்கட்டுவார், உமது சத்தியத்தினிமித்தம் அவர்களை நிர்மூலமாக்கும். உற்சாகத்துடன் பலியிடுவேன், கர்த்தாவே, உமது நாமத்தைத் துதிப்பேன், அது நலமானது. அவர் எல்லா நெருக்கத்தையும் நீக்கி, என்னை விடுவித்தார், என் கண் என் சத்துருக்களில் நீதி சரிக்கட்டுதலைக் கண்டது. **- சங்கீதம் 54: 1-7**

*தொடரும்...*



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 919



## அளவெட்டி, ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்

*அத்தனாகி அன்னையாகி ஆளும் எம்பிரானுமாய்*
*ஒத்தொவ்வாத பல்பிறப்பொழித்து நம்மை ஆட்கொள்வான்*
*மத்தனார் முகுந்தனார் புகுந்து நம்முள் மேவினார்*
*எத்தினால் இடர்க்கடல் கிடத்தியேழை நெஞ்சமே.*

இவ்வாலயத்தை அழிவிலிருந்து காப்பாற்றி, இன்று மக்கள் போற்றும் ஆலயமாக விளங்கக் காரணமாக இருந்தவர் அருட்கவி. சீ. விநாசித்தம்பிப்புலவர் அவர்கள். இவ்பெரியாரின் வரலாறு மிக விரிவானது. சோதிடராக, வைத்தியராக, அருட்கவியாக விளங்கிய இப் பெரியார், இவ்வாலயத்தோடு தொடர்புடைய பல அற்புதங்களை அனைவரும் அறியும் முறையிலே குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான அற்புதங்கள் எண்ணிலடங்காதவை. இறைநம்பிக்கையை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதாக இவை அமைந்துள்ளன. சோதிடம், வைத்தியம் ஆகிய துறைகளில் கைதேர்ந்தவரான அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் அவர்கள் ஸ்ரீ நாகவரத நாராயணரிடம் அனைத்தும் நீயே எனச் சரணாகதி அடைந்த பேரின்ப நிலையைப் பெற்றவர். அவனருளால் அவன் தாள் வணங்கி அந்த அருளின் மூலம் மக்கள் குறைகளைத் தீர்த்த பேராளர். இப் பெரியார் வாழ்க்கையில் மட்டுமன்றி, பிறர் வாழ்க்கையிலும் நிகழ்ந்த அற்புதங்கள் அளவிடற்கரியது.

திருநீறும் தீர்த்தமும் கொடுத்து அதன் மூலம் நோய்தீர்த்த வரலாறுகள் பல அருட்கவி அவர்களுடைய வாழ்க்கையிலே புதைந்துள்ளது. மந்திரமாவது நீறு என்று போற்றப்பட்ட பசுவின் சாணத்தைச் சுட்டெரித்த நீற்றில் மந்திரம் சேர்ந்தவுடன் அது மருந்தாக மாறுகின்றது. அருட்கவி அவர்கள் திருநீற்றின்மேல் ஓங்காரம் முதலிய எழுத்துக்களைப் பதித்து அதன்மேல் கற்பூரம் கொளுத்தி, தெய்வத்தைப்பூசிப்பவர். அந்தத் திருநிற்றை அருட்கவி அவர்கள் தன்னிடம் வரும் அடியவர்களுக்குக் கொடுத்து ஆசீர்வாதம் வழங்குவதுண்டு. அந்தத் திருநீற்றை நோயாளர் வாயிலும் இடுவார். இதன்மூலம் நோய் கொண்டவர்கள் நோய் நீங்கிச் சுகம் பெறுவார்கள்.

இவ்வாறே வேதநாமங்களைச் சொல்லி வழங்கும் தீர்த்தமும், பல நோயாளர்களைக் குணமாக்கிய வரலாறு அருட்கவி. சீ. விநாசித்தப்பிப் புலவர் வாழ்க்கையில் மேலாங்கிக் காணப்பட்டுள்ளது. இவருடைய தந்தையாரும் வேறு சிலரும் அருட்கவி அவர்கள் குடும்பத்தில் ஆயுர்வேத வைத்தியர்களாகப் புகழ்பெற்றுக் காணப்பட்டுள்ளனர். அந்தப் பரம்பரை வைத்திய சித்தியும், இறையருளும் அருட்கவி அவர்களிடம் ஒன்று சேர்ந்து, அவரை நாடிவரும் அனைவரின் உடல், உள பிணிகளைத் தீர்த்துள்ளது.

ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்திலே இடம்பெற்றுள்ள அற்புதங்கள் பல, சிந்தனைக்கு அப்பாற்பட்டவையாகக் காணப்படுகின்றது. இப்படியும் நடக்குமா? ஏன எண்ணத்தக்கவகையிலே நிகழ்ந்துள்ளது. இவற்றிற்கு வாழும் காலமும் ஊர்மக்களும் சாட்சியாக உள்ளனர். ஆயினும், இறையருளை எண்ணத்தில் கொள்ளும் மக்கள் கூட்டம், அவை நிதர்சனமாகும்போது கேள்விக்குறியோடு அந்த அற்புதங்களை நோக்குகின்றனர். ஆனால் நிகழ்ந்தவை நிகழ்ந்தவையே. உதாரணத்திற்கு ஒரு சம்பவத்தை நோக்குவது இறையருளைப் புரிந்துகொள்ளவும் யாவற்றிற்கும் மேலான பரம்பொருளிடம் சரணாகதி அடைந்தால் அனைத்தும் சரிவர நடைபெறும், மாண்டவர் மீளும் அற்புதங்களும் நிகழும் என்பதைப் புரிந்து கொள்ளலாம். சங்கானையைச் சோந்த சிறுவனின் பெயர் துரைச்சாமி சிவசுதன். இச்சிறுவன் நாலு வயதாயிருக்கும்பொழுது நோய்வாய்ப்பட்டு மானிப்பாய் வைத்தியசாலையில் இறந்துவிட்டான். இச்சிறுவனுடைய பெற்றோர் நாராயணனையே அனைத்துமாக எண்ணி வாழ்பவர்கள். நாராணணனிடம் சரணாகதியடைந்த தூய பக்தர்கள்.

தமது நான்கு வயது மகன் இறந்ததும் செய்வதறியாது அழுதுபுரண்ட பெற்றோர் குழந்தையைத் தூக்கிக்கொண்டுவந்து ஸ்ரீநாகவரத நாராயணர் கோயிலில் கிடத்தி அழுது புரண்டு நாராயணரிடம் வேண்டினர். யாரும் எதிர்பாராதவகையில் சிறிது நேரத்தில் அச்சிறுவன் துயில்நீங்கி எழுபவன்போல் எழுந்து தேநீர் வேண்டும் என்று கத்தினான். இந்த அற்புத நிகழச்சியைக் கண்ணுற்ற மக்கள், இறைவன்மீது நம்பிக்கை வைத்து அவனிடம் சரண் புகுந்தால் அனைத்தும் கைகூடும் என்பதைக் கண்முன்னால் கண்டு, ஸ்ரீ நாகவரத நாராயணரைப் போற்றித் துதித்தனர். இவ்வாலயத் தேரிலே இவ்வரலாறு சித்திரச்சிலையாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இந்துமதத்தின் ஒரு பிரிவாக வைணவம் காணப்பட்டாலும் “எல்லாத் தெய்வமும் யானேதான் எவன் எத் தெய்வத்தைக் கும்பிட்டாலும் அந்த வழிபாடெல்லாம் என்னையே சாரும்” என்று கீதையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய எல்லாக் கோவில்களிலும் எல்லாத் தெய்வத்தையும் வணங்கி வழிபடும் மரபு ஈழத்திலே காணப்படுகின்றது. மாண்ட குழந்தை மீண்ட அற்புதமான சம்பவத்திற்குப் பிறகு இவ்வூர் மக்கள் நாராயணர்மீது வேறுபாடின்றி ஆழ்ந்த பக்தி செலுத்தலாயினர்.

இவ்வாறான மற்றுமொரு சம்பவத்தை அருட்கவி. சீ. விநாசித்தம்பிப்புலவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். கோயில்களைச்சுற்றி நந்தவனம் அமைத்து ஆலயத்திற்குத் தேவையான மலர்களைப் பறிப்பது காலம் காலமாக நிகழந்து வரும் தெய்வீகத்தொண்டாகக் காணப்படுகின்றது. இவ்வாலயத்திற்கு அருகாமையிலும் பூமரங்கள் பல காணப்பட்டன. இவற்றுள் சிவப்புமலர் பூக்கும் செம்மந்தாரை விருட்சமும் காணப்பட்டது. இம்மலர்களைக் கண்ணுற்ற அருட்கவி அவர்கள் மனதிலே “ இந்தப் பூக்கள் எல்லாம் வெண்மலர் பூத்தால் அழகாயிருக்குமே கண்ணா, மணிவண்ணா என்று ஒரு மாலைநேரம் கூறிவிட்டு சென்றுவிட்டார். மீண்டும் கண்ணன் தனது திருவிளையாடலை நிகழ்த்தி மக்களுக்கு தான் யார் என்பதை உணர்த்தத் திருவுளம் கொண்டான்போலும். அடுத்தநாள்காலை செம்மந்தாரை விருட்சத்திலே எல்லாப்பூக்களும் வெண்மலர்பூத்து கண்கொள்ளாக்காட்சியாகத் தென்பட்டது. இச்சம்பவத்திற்குப் பிறகு இவ்விருட்சத்தில் வெண்மலர்களே பூப்பது வழக்கமாகிவிட்டது.

*-வளரும்*



# இவ்வார ராசிபலன்

**30-10-2020 வெள்ளி தொடக்கம் 05-11-2020 வியாழன் வரையும்**




**மேஷம்:** வேண்டாத நட்புக்கள் விலகி ஓடக்கூடிய வாரம். புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: கைலாசநாதப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**ரிஷபம்:** கண்ணும் கருத்துமாக செயல்பட்டு பொன்னும், பொருளும் சேர்க்கக்கூடிய வாரம். கடன்சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும். பைரவ வழிபாட்டால் பாவம் தீரும்.
வழிபடவேண்டியதெய்வம்: அங்காள பரமேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மிதுனம்:** வெறுப்புக்கள் விலகி பொறுப்புக்கள் சேரக்கூடிய வாரம். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். நோய் அகலும். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கனக துர்க்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கடகம்:** கலக்கமான சூழ்நிலைகள் விலகி இணக்கமான சூழ்நிலைகள் ஏற்படக்கூடிய வாரம். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை கூடும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும்.உற்சாகம் அதிகரிக்கும். திடீர் செலவு ஏற்படும். மங்கல செய்தியால் மனம் மகிழும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அய்யனார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**சிம்மம்:** துயரங்களை துடைத்தெறிந்து உயரங்களை சந்திக்கக்கூடிய உன்னதமான வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பேச்சில் கணிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அக்னிலிங்கப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**கன்னி:** நட்டமில்லாத நன்மைகளை சந்திக்கக்கூடிய வாரம். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன் பிறப்புகளால் உதவி கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். மேன்மையான நாள். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பட்டத்தரசியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**துலாம்:** பொறுமையை கடைப்பிடித்து பொறாமையை விரட்டியடிக்கக் கூடிய நாளாக உள்ள வாரம். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும். உறவினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். பணியில் உயர்வு கிட்டும். கஷ்டகாலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். விவேகமான வாரம். வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஹோரம்ப கணபதி, அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**விருச்சிகம்:** உன்னதமான கிருபைகளும் உண்மையான நன்மைகளும் நடக்கக்கூடிய வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும் நாள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வீர அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




**தனுசு:** முத்தாய்ப்பான முன்னேற்றங்களை சந்திக்கக்கூடிய வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




**மகரம்:** விருப்பங்கள் நிறைவேறி திருப்பங்கள் நடக்கக்கூடிய வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள்.
வழிபடவேண்டியதெய்வம்: தேவி செல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கும்பம்:** பணவரவும், பாராட்டும் கிடைக்கக்கூடிய வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச்சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத் தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரித்து குடும்பம் ஒன்று சேரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மாங்கல்யேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**மீனம்:** கண்ணியமான புண்ணியம் கிடைக்கக்கூடிய வாரம். மனம் மகிழும் நாள். உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். திறமைகள் அதிகமாகும். இன்னல்கள் அகலும். கடன் தீரும். ஆக்கம் அதிகரிக்கும். பழைய பாக்கி வசூலாகும். வியாபாரத்தில் கவனம் தேவை. தன வரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். பழைய நட்பு பலன் தரும். உறவினரால் பாதகம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. உலோகத் தொழில் உயர்வு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அன்னமார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவீதத்தில் அடைவு பிடிக்கப்படும்

PAWN BROKERING
பழைய பவுண்கள் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளப்படும்
Cash Point
துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.

Cash Point
3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000



# தீபாவளி பண்டிகை

தீபம் என்றால் ஒளி, விளக்கு. "ஆவளி" என்றால் வரிசை. வரிசையாய் விளக்கேற்றி, இருள் நீக்கி, ஒளிதரும் பண்டிகையே தீபாவளி ஆகும். தீபத்தில் பரமாத்மாவும், நெருப்பில் ஜீவாத்மாவும் வாசம் செய்து அருள் தருவதாய் ஐதீகம். ஒவ்வொருத்தர் மனதிலும் ஒரு சில இருட்டு உள்ளது. அகங்காரம், பொறாமை, தலைக்கனம் போன்ற எதையாவது ஒன்றை அகற்ற வேண்டும். ஒரு தீயகுணத்தை எரித்துவிட வேண்டும்.

இந்துக்கள் தீபாவளி கொண்டாடுவதற்கு பல காரணங்களை, புராணக் கதைகளின்வழியாகக் கூறுகின்றனர். இராமாயண இதிகாசத்தில், இராமர், இராவணனை அழித்து விட்டு, தனது பதினான்கு வருடங்கள் வனவாசம் முடித்து, மனைவி சீதையுடனும் சகோதரன் இலட்சுமணனுடனும் அயோத்தி திரும்பிய நாளை, அயோத்தி மக்கள் ஊரெங்கும் விளக்கேற்றிக் கொண்டாடி மகிழ்ந்தனர். இந்நாளே தீபாவளியாக கொண்டாடப்படுவதாக கருதப்படுகிறது.

நரகாசுரனின் பெயர் காரணம்: நரகாசுரனின் உண்மைப் பெயர் பவுமன். திருமால் வராக அவதாரம் எடுத்து பூமியை துளைத்து அசுரர்களை அழிக்கச்சென்ற போது, அவரின் ஸ்பரிசத்தால் பூமாதேவிக்குப் பிறந்தவன். அசுர வதத்தின் போது பிறந்தவன் என்பதால் அசுர சுபாவம் இவனுக்கு இயல்பாக அமைந்து விட்டது. நரன் என்றால் மனிதன். மனிதனாக இருந்தாலும், துர்க்குணங்கள் நிரம்பியவனாக இருந்ததால் நரகஅசுரன் எனப்பட்டான். அப்பெயரே நரகாசுரன் என்றானது.
இந்த தீபாவளி எப்படி வந்தது என்று பல்வேறு கதைகள் கூறப்படுகின்றன. நரகாசுரன் என்ற ஒரு அரக்கன் இருந்தான். அவன் தேவர்களுக்கும் மக்களுக்கும் பல்வேறு துன்பங்களை கொடுத்து வந்தான்.

இதை அறிந்த மகாவிஷ்ணு அவனை கொல்ல நினைத்தார். ஆனால் அவன் பூமி தாய்க்கு பிறந்தவன். அவன் தன் தாயை தவிர வேறு யாராலும் கொல்லப்பட முடியாத வரம் பெற்றிருந்தான். எனவே மகா விஷ்ணு ஒரு தந்திரம் செய்தார். நரகாசுரனுடன் போரிட்டார்.
அவன் மகா விஷ்ணு மீது அம்பு எய்தினான். இந்த அம்பு பட்டு அவர் மயக்கம் அடைவது போல் கீழே விழுந்தார். இதை பார்த்த சத்ய பாமா கோபம் அடைந்து நரகாசுரனை போருக்கு அழைத்தார். சத்திய பாமா பூமியின் அவதாரம் என்று உணராமல் அவரோடு போர் செய்தான். அன்னையின் அம்புக்கு பலியாகி விழுந்தான்.

அப்போதுதான் அவனுக்கு சத்யபாமா தனது தாய் என்று தெரிந்தது. அப்போது அவரிடம், அம்மா, நான் மறைந்த இந்நாள் மக்கள் மனதில் நிற்க வேண்டும். என்னுடைய பிடியிலிருந்து விடுபட்ட தேவர்களும் மக்களும் இந்த நாளை இனிப்பு வழங்கி வெடி போட்டு கொண்டாட வேண்டும் என்று வேண்டினான். மகாவிஷ்ணுவும் சத்யபாமாவும் அவனுக்கு வரம் கொடுத்தார்கள்.

இதையொட்டி நரகாசுரன் மறைந்து மகிழ்ச்சி பொங்கிய நாள் தீபாவளி பண்டிகையாக கொண்டாடப்படுகிறது.

# தீபாவளி நல்லெண்ணெய் குளியல்

தீபாவளி பண்டிகை என்றாலே பட்டாசும், பலகாரமும் முதலிடம் பிடிக்கிறது. கிராமப் புறங்களில் அசைவ உணவு களைகட்டும். இவை அனைத்துக்கும் முன்பாக உடம்பில் குளிர குளிர எண்ணெய் தேய்த்து வெந்நீர் குளியல் போடுவது முக்கியம். உச்சி முதல் உள்ளங்கால்வரை நல்லெண்ணெய் தேய்த்து ஊறவைத்து வெது வெதுப்பான வெந்நீரில் குளியல் போடுவது பாரம்பரியம். தீபாவளி நாளில் அதிகாலை 3 மணி முதல் 5 மணிக்குள் சூரிய உதயமாகும் முன்பாக எண்ணெய் தேய்த்து குளிப்பது சம்பிரதாயம். எண்ணெய் தேய்த்து குளிப்பதால் ஏற்படும் பலன்களைப் பார்க்கலாம்.

நல்லெண்ணெய் தேய்த்து குளிப்பதால் இளநரை வராது. சளி, தலைவலி, சைனஸ் தொந்தரவு நீங்கும். ஆரோக்கியமான தூக்கம் கிடைக்கும்.

சனி நீராடு என்பது பெரியவர்கள் கூறும் முது மொழி. புதன்கிழமை, சனிக்கிழமைகளில் ஆண்கள் எண்ணெய் தேய்த்து குளிப்பது பாரம்பரியம். உடலுக்கு ஆரோக்கியம். பெண்கள் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் நல் லெண்ணெய் தேய்த்து குளிப்பது உடல் சூட்டை தணிக்கும். நல்ல எண்ணெய் என்று அழைக்கப்படும் எள் எண்ணையை உடல் முழுக்க தேய்த்து, வெந்நீரில் குளிப்பது. இதனால் அறிவியல் ரீதியாக உடலில் உள்ளஎண்ணை பசை மற்றும் நமது தோல் பகுதிகள் புத்துணர்ச்சி அடையும் என்கிறார்கள். எள் எண்ணெய் எனப்படும் நல்லெண்ணெயில் லட்சுமி வாசம் செய்கிறார் என்பது ஐதீகம். வெந்நீரில் கங்கை வாசம் செய்கிறார். எனவேதான் தீபாவாளி நாளில் நல்லெண்ணெய் தேய்த்து குளிப்பதை பாரம்பரியமாக கடைபிடிக்கின்றனர். இன்றைய பரபரப்பான காலத்தில் இளைய தலைமுறையினர் எண்ணெய் குளியலை மறந்தே விட்டனர். வீக் என்ட் கலாச்சாரத்தில் உள்ளவர்கள் தீபாவளி நாளிலாவது தியேட்டர்களில் போய் அமர்ந்து கொள்ளாமல் எண்ணெய் தேய்த்து குளித்து இறைவன் அருளை பெறலாம்.

**கிருஷ்ணன் கொடுத்த வாக்கு**

ஐப்பசி மாதம் அமாவாசைக்கு முதல்நாள் நரகாசுரனை கிருஷ்ணர் தனது மனைவி பாமாவின் துணையுடன் வதம் செய்தார் என்கிறது புராணம். இந்த நாளில் தைல ஸ்நானம் செய்து புது வஸ்திரம் அணிந்து உற்சாகமாக கொண்டாடுவோம் என கிருஷ்ணர் நரகாசுரனுக்கு வாக்களித்தார். எனவேதான் பாரம்பரியமாக எண்ணெய் குளியல் நடக்கிறது.

**உடல் சூடு குறையும்**

சனி நீராடு என்பது பெரியவர்கள் கூறும் முது மொழி. புதன்கிழமை, சனிக்கிழமைகளில் ஆண்கள் எண்ணெய் தேய்த்து குளிப்பது பாரம்பரியம். உடலுக்கு ஆரோக்கியம். பெண்கள் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் நல்லெண்ணெய் தேய்த்து குளிப்பது உடல் சூட்டை தணிக்கும். சூரிய உதயத்திற்கு பின்பே எண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும்.

நல்லெண்ணெய் தேய்த்து குளிப்பது உடல் சூட்டை தணிக்கும். சூரிய உதயத்திற்கு பின்பே எண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும்.

**சூரிய உதயத்திற்கு முன்** ஸ்திரம் ஒத்து வராது. சூரிய உதயத்திற்கு முன்பே அதிகாலையில் நல்லெண்ணெய் தேய்த்து சுடுநீரில் குளிக்க வேண்டும்.

தீபாவளி நாளில் தலையில், உடம்பில் தேய்க்கும் நல்லெண்ணெயை காய்ச்சுவதே ஒரு கலை அதற்கு தேவையான பொருட்களை முதல்நாளே சேகரித்து வைத்து விடுவார்கள். நல்லெண்ணெய் காய்ச்சுவதற்காக ஒரு வாணலியை தயார் செய்து வைத்து விடுவார்கள். அதிகாலையிலேயே அலாரம் வைத்து எழுந்து வானலியில் நல்லெண்ணெய் ஊற்றி கொஞ்சம் மிளகு, சீரகம், வெள்ளைப்பூண்டு தோலுடன் தட்டிப்போட்டு கூடவே சின்ன வெங்காயம், காய்ந்த மிளகாய் சேர்த்து அடுப்பை சிம்மில் வைத்து புகையாமல் காய்ச்சி ஆற வைப்பார்கள்.
வெது வெதுப்பான நல்லெண்ணெயை உச்சந்தலையில் முதலில் வைக்க வேண்டும்.

**எண்ணெய் மசாஜ்**

உடல் முழுவதும் தேய்த்து விட்டு உள்ளாங்கால்களில் கடைசியாக தேய்க்க வேண்டும். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் வரிசையாக அமர்ந்து ஒரு கின்னத்தில் எண்ணெய் ஊற்றி உடம்பில் தேய்த்து மசாஜ் செய்து ஊறவைப்பதை பார்ப்பது தனி அழகுதான்.

**வெந்நீரில் கங்கை**

வெந்நீரை காய்ச்சி அதில் சிறிதளவு சந்தனம், மஞ்சள் போட்டு குளிப்பது பாரம்பரியம். வெந்நீரில் சந்தனம், மஞ்சள் தூள் போடுவதால் அந்த நீரில் கங்கை எழுந்தருளுவதாக ஐதீகம். இதைத்தான் கங்கா ஸ்நானம் என்கின்றனர். எண்ணெய் தேய்த்து அரைமணிநேரம் ஊறிய பின்னர் வெது வெதுப்பான நீரில் குளிக்க வேண்டும். குளிப்பதற்கு கலப்படம் எதுவும் இல்லாத அரப்பு, சீயக்காய்தான் பயன்படுத்த வேண்டும்.

**எண்ணெய் சனி**

அனைத்து எண்ணெய்களுக்கும் சனி பகாவான் தான் காரகர் என்றாலும் நல்லெண்ணைதான் சனிக்கு உகந்த எண்ணையாக கருதப்படுகிறது.
உடல் கட்டு மற்றும் எலும்பிற்கு காரகன் சனி பகவான் ஆவார். எனவே உடல் கட்டுகோப்பாக இருக்க நல்லெண்ணை குளியல் சிறந்தது என

ஆயுர்வேதம் மற்றும் மருத்துவ ஜோதிடம் கூறுகிறது.

**நல்லெண்ணெய் மசாஜ்**

அது ஏன் வாரத்தில் ஏழு நாட்கள் இருக்க ஆண்களுக்கு புதன் மற்றும் சனிக்கிழமையும் பெண்களுக்கு செவ்வாய் வெள்ளிக்கிழமை களும் பரிந்துரைக்கப்படுகிறது தெரியுமா? சனி பகவானும் புதபகவானும் வாத கிரகம் ஆவார். வெள்ளிக்கிழமைக்கு அதிபதியான சுக்கிரன் கப மற்றும் வாத கிரகமாவர். எலும்பு மற்றும் வாத நோய்களுக்கு நல்லெண்ணை மசாஜ் மற்றும் குளியல் சிறந்தது என மருத்துவ ஜோதிடம் சொல்கிறது.

**மன அழுத்தம் போக்கும்**

இன்றைக்கு பித்தமும் உடல் சூடும் அதிகரித்து இருக்கிறது. நல்லெண்ணெய் குளியல் பித்தம், உடல் சூட்டை தணிக்கிறது. தோல் வறட்சி நீங்கும். ரத்த ஓட்டம் சீராக இருக்கும். எண்ணெய் குளியல் மன அழுத்தத்தை நீக்கும் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன. எனவேதான் வாரம் இருமுறை தவறாமல் எண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும் என்கின்றனர் முன்னோர்கள். எண்ணெயில் பூண்டு, சீரகம், சிவப்பு மிளகாய் சேர்த்து பதமான சூட்டில் இதமாக குளிக்க வேண்டும்.

**சனி தோஷம் விலகும்**

சனீஸ்வர பகவானுக்கு புதனும் சுக்கிரனும் நட்பு கிரகங்கள் என்ற அடிப்படையிலும் சனி புதன் கிழமைகளில் ஆண்களும் வெள்ளிக்கிழ மைகளில் பெண்களும் எண்ணை தேய்த்து குளிப்பது சிறந்த பயனளிக்கும்.

நல்லெண்ணெய் தேய்த்து குளிப்பதால் இளநரை வராது. சளி, தலைவலி, சைனஸ் தொந்தரவு நீங்கும். ஆரோக்கியமான தூக்கம் கிடைக்கும். சூரியன் மற்றும் செவ்வாயால் ஏற்படும் உடல் உஷ்ணம் நீங்கும். சனியினால் ஏற்படும் வாத மற்றும் எலும்பு நோய்கள் நீங்கும். புதனால் ஏற்படும் சரும நோய்கள் மற்றும் நரம்பு நோய்கள் நீங்கும். சுக்கிரனின் காரகமான முடி கொட்டுவது நின்று நன்கு வளரும். சனி தோஷம் விலகும். இன்று அகம்பாவத்தினால் எண்ணெய் குளியல் செய்யாதவர்களுக்கு நரகம் கிடைக்கும் என சாஸ்திரம் கூறுகிறது. வீட்டில் பூஜைகள் முடிந்து புத்தாடைகள் அணிந்து பட்டாசு வெடித்து பின்னர் பலகாரம் சாப்பிட வேண்டும். மாலையில் லட்சுமி பூஜை செய்ய ஆண்டு முழுவதும் லட்சுமி கடாட்சம் ஏற்படும்.

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் பிறப்பு: 29–11–1977

விண்ணிற்கு பறப்பு: 09–11–2014

## திருமதி. கேமலதா விக்னராஜ்

யாழ்ப்பாணம் புதுச்செம்மணி வீதி,
கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும்,
கனடா அஜெக்ஸ் நகரை வதிவிடமாகவும்
கொண்டிருந்த திருமதி. கேமலதா விக்னராஜ்
அவர்களின் 6ம் ஆண்டு நினைவஞ்சலி.
திதி:- 03-11-2020

அன்பு மகளாய் இசைந்து போகும் சகோதரியாய்
அழகுமிகு வாழ்க்கைத் துணையாய் அணைத்து மகிழும் அன்னையாய்
எம்மோடு பயணித்த திருமகளே உனை நாம் இழந்து
ஆறாவது ஆண்டை அழுகையுடன் கடக்கின்றோம்

அழுகையும் கண்ணீரும் எம்மை விட்டு நீங்கவில்லை
உன்னிடமிருந்து பெற்ற அன்பின் சுகம் அகலவில்லை
எப்போதும் புன்னகைக்கு உன் அழகுமுகம் நிலவைப்போல்
உன் உருவம் எப்போதும் எமைச் சுற்றி காட்சி தரும்
ஆனால் நிஜமான உன்னை இழந்து இருப்பதே மிகக் கொடுமை

நீ நடந்த முற்றத்தின் பூமரங்கள் கூட உன்னைத் தேடுகின்றன
எம் வீட்டு ஜன்னல்கள் ஊடே வரும் காற்றும் நீ எங்கேயென்கிறது
பாதி வழியில் அனைவரையும் தவிக்கவிட்டு நீ சென்ற
திசையைப் பார்த்தபடி திகைத்தவராய் நாம் இங்கு

மாளிகை போன்ற புது மனையில் மகிழ்ச்சியுடன் குடிபுகுந்து
மாதங்கள் சில கடக்க மகளே உனை நாம் இழந்தோமே
கழுத்தில் பளிச்சிட்ட உன் தாலியும் தவித்தபடி தனியாக
அற்புதமான வாழ்விலிருந்து உனைப் பறித்த காலன் கொடியவன்

எங்கிருந்தாலும் நீ அழகுடனே திகழவேண்டும்
எம்மை மறவாத அன்புடனே உன் இருப்பு தொடரவேண்டும்
பூவுலகில் எம் வாழ்வு உனை இழந்த சோகத்தால் வெறுமைதான்
பாசம் மிகக் கொண்டவளே எம் மடியில் நீ மீண்டும் வந்தமர வேண்டும்

தங்கள் நினைவால் வாடும் பாசமுள்ள அப்பா, அம்மா, அன்புக் கணவர்,
பிள்ளைகள், சகோதர, சகோதரிகள், மைத்துனர் மற்றும் பெறாமக்கள்

தொடர்புகளுக்கு : 647 - 335 - 5841, 416 - 754 - 7458

Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
INFORCE LIFE Financial Services Inc.
RESP Registered Education Saving Plans
40% - 20% Government Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing
UTHAYAN உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் தமிழ் வீரம் வாரச் செய்தி இதழ்
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
October 2020
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
PARK PLAZA
1646 VICTORIA PARK AVE., SUITE 1 (BETWEEN LAWRENCE & EGLINTON) TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1282 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 30, 2020

# ONTARIO PROVINCIAL GOVERNMENT SUBMITS 2020 BUDGET ON 5th OF NOVEMBER

# ஒன்றாரியோ அரசு தனது இவ்வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தை நவம்பர் 5ம திகதி சமர்ப்பிக்கின்றது



கொரோனாத் தொற்று காரணமாக பல தேசங்களும், அவற்றின் மாகாணங்களும், உள்ளாட்சி மன்றங்களும் நிதி நெருக்கடிகளாலும் செலவீனங்களினாலும் மக்களுக்கு சேவைகளை வழங்குவதில் சவால்களை எதிர்கொண்டுள்ள இந்த நெருக்கடியான தருணத்தில் கடனா-வின் மிகப் பெரிய மாகாணம் என்று சொல்லப்படுகின்ற ஒன்றாரியோ அரசு தனது வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை எதிர்வரும் நவம்பர் 5ம் திகதி ஒன்றாரியோ பாராளுமன்றம் என்று அழைக்கப்படுகின்ற "குயின்ஸ் பார்" க்கில் சமர்ப்பிக்க உள்ளது.

மாகாணத்தின் நிதி அமைச்சரான கௌரவ றொட் பிலிப்ஸ் அவர்கள் இந்த வரவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றவுள்ளார்.

அவரது அமைச்சிலிருந்து எமக்குக் கிடைத்துள்ள தகவல்களின் படி இவ்வருடத்தின் வரவு செலவுத்திட்டத்தில் மாகாணத்தின் சுகாதாரத் தேவைகள் முன்னேற்றங்கள் மற்றும் மக்களுக்கான சேவைகள் மற்றும் பொருளாதார ரீதியான தன்னிறைவு அடைதல் போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று தெரவிக்கப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வருடத்தின் வரவு செலவுத் திட்டத்தில் சிறு வர்த்தகர்களின் வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் அவர்களுக்கு உதவிகள் வழங்கப்படும் என்றும் சிறு வர்த்தகர்கள், அரச நிறுவனங்களுக்கு வழங்க வேண்டிய வரிகளைச் செலுத்துவது மற்றும் மின்சார கட்டணம் எரிவாயு கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதில் ஏற்படும் பொருளாதார சிக்கல்களைச் சமாளிக்க சுமார் 300 மில்லியன் டாலர்கள் ஒதுக்கட்டுள்ளதாகவும் இதனால் மாகாணத்தில் உள்ள சிறுவர்த்தக உரிமையாளர்களின் பல சிரமங்கள் தீர்வதற்கு வாய்ப்புக்கள் அடங்குகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரவு செலவுத்திட்டம் தொடர்பாக குறிப்பிட்டுள்ள மாகாண நிதி அமைச்சர் றொட் பிலிப்ஸ் அவர்கள் தனது குறிப்பில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"நிதி அமைச்சர் என்ற வகையில் எனக்கு மகிழ்ச்சி அளிக்கும் விடயம் என்னவென்றால் இந்த ஆண்டு இந்த மாகாணத்தில் வசிக்கும் தனி நபர்கள், அமைப்புக்கள், வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் ஆகியவர்கள் அடங்கிய சுமார் 8000 பேரிடமிருந்து எமது மாகாணத்தின் பொருளாதாரத்தை கட்டி எழுப்பக் கூடிய ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள் ஆகியன எமது அமைச்சுக்குக் கிடைத்துள்ளன. இவற்றினை பரிசீலித்து நாம் திட்டங்களைத் தீட்டுவதன் மூலம் எமது மாகாணத்தை அடுதத வருடத்தில் தன்னிறைவு அடைந்த ஒரு மாகாணமாக உயர்த்திக் கொள்ளலாம் என்று நம்புகின்றேன்.

மேலும் உலக நாடுகள் அனைத்துள்ள இந்த நெருக்கடியான கொரோனா காலத்தில் நம்பிக்கையையும் வெளிப்படைத் தன்மையையும் கொண்டவர்களாக நாம் இருந்தால் எமது பின்னடைவுகளிலிருந்து இலகுவில் மீண்டு வரலாம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

# நல்லதோர் வணிக வளாகத்தில் கனடாவின் 'நல்லூர்க் குமரன் புடவை மாளிகை'






கனடாவில் நீண்ட கால வர்த்தக வெற்றிகளைக் கொண்ட ரிசிகேசன் அவர்களின் "நல்லூர்க் குமரன்" புடவை மாளிகையின் சிறியதும் புதியதுமான அழகிய கிளையொன்று அண்மையில் ஸ்காபுறோ-மார்க்கம் நகரங்களுக்கு நடுவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மார்க்கம்- மெக்னிக்கல் சந்திப்பில் வடமேற்கு மூலையில் - NORTH-WEST CORNER -அமைந்துள்ள MAJESTIC CITY வர்த்தக வளாகத்தில் "மானிப்பாய்" வீ-தியில் திறக்கப்பட்டுள்ள இந்த "நல்லூர்க் குமரன்" கிளையின் தொலைபேசி இலக்கம்: 647-764-5656 ஆகும். வழமைபோல அங்கு எந்நாளும் "மலிவு விற்பனை" தான். இங்கே காணப்படும் படங்களில் திரு ரிசிகேசனுடன் திருவாளர்கள் சிவா கணபதிப்பிள்ளை ஆகியோர் உள்ளனர்.



# கொவிட்-19 நோய்த்தொற்றினை எதிர்கொள்வதற்கென ஒன்றாரியோ மாகாணத்தில் மேலதிக மருத்துவ படுக்கைகள்

ஒன்றாறியோவிலுள்ள 32 மருத்துவமனைகளுக்கு மேலதி-கமாக 766 படுக்கை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கென 116.5 மில்லியன் டொலர்களை வழங்குவதாக முதல்வர் போர்ட் அவர்களும் அமைச்சர் எலியட் அவர்களும் அறிவித்துள்ளனர்.

இலையுதிர் காலத் துக்கான தயாரிப்படுத்துதலுக்கென 139 தீவிர நோயாளர் படுக்கைகளுக்கும், 1,349 சாதாரண வைத்தியசாலைப் படுக்கைகளுக்கும் 234.5 மில்லியன் டொலர்கள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. இப்போது அறிவிக்கப்பட்ட படுக்கைகள் எதிர்கால கொவிட்-19 நோய்த்தொற்றிலிருந்து ஒன்றாறியோ வாழ் மக்களைப் பாதுகாக்கும் வித்தில் மேற்கொள்ளப்படும் மேலதிக செயற்பாடடாகும்.

இது, 57 வைத்தியசாலைகளில் 2,250 க்கும் மேற்பட்ட புதிய படுக்கைகளுக்கும், மானிலத்திலுள்ள ஏனைய சுகாதார வசதிகளுக்குமான மொத்த முதலீட்டை 351 மில்லியன் டொலர்களாகக் கூட்டியுள்ளது.

கூடுதலான படுக்கைகளை நோயாளிகளுக்கு ஒதுக்குவது அறுவைச் சிகிச்சைக்குக் காத்திருக்கும் கால எல்லையைத் தாமதப்படுத்தாது செயற்பட வைப்பதற்கும், கொவிட்-19 சிகிச்சைகளை மேம்படுத்தவும் உதவும். இந்நிதியானது ஒன்றாறியோ மானிலத்தின் கொவிட்-19 நோய்க்கான இலையுதிர் கால தாயாரிப்புகளை மேம்படுத்தும் விதத்தில் அமையும்.

*விஜய் தணிகாசலம்,*
*ஸ்காபரோ - றூஜ் பார்க*
*ஒன்றாறியோ*
*மாகாண சட்டமன்ற உறுப்பினர்.*

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

அறிவித்தல்களை உலகெங்கும் உடனுக்குடன் உங்கள் உறவுகளுக்கு கொண்டு செல்ல வேண்டுமா?
எமது கனடா உதயன் பத்திரிகையின் இணையத்தளமான www.uthyannews.ca இல் பிரசுரமாகும் அறிவித்தல்கள் மற்றும் அவசர விளம்பரங்கள் உதயன் பத்திரிகையிலும் அத்துடன் எமது சகோதர இணையத்தளங்களான www.nanban.ca மற்றும் www.voicefilankai.lk ஆகியவற்றில் பிரசுரம் செய்யுங்கள்.
உதயன் கட்டணங்கள் மிகக் குறைவு
நண்பன் WORLDWIDE
Voice of ilankai Voice for Voiceless
World Wide Web
தொலைபேசி இலக்கங்கள்: கனடா+1 416-587-0552 கொழும்பு: +94 777 555 026 யாழ்ப்பாணம்: +94 7666143 074 சென்னை: +91 784500 6977